# சிறு பிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை

| | |
|---|---|
| **கிருபை** | அன்புள்ள பரம தகப்பனே, என்னை நேசித்து, உம் பிள்ளையாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. |
| **அன்பு** | உம்மை நேசித்து, உமக்குக் கீழ்ப்படிய உதவி செய்யும். |
| **மனதுருக்கம்** | நீர் என்னை நேசிப்பது போல நானும் மற்றவர்களை நேசிக்க உதவும். |
| **மனந்திரும்புதல்** | என் பாவங்களுக்காக வருந்துகிறேன். என்னைச் சுத்திகரியும். |
| **ஆராதனை** | என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்! |
| **அர்ப்பணிப்பு** | இயேசுவே, உம்மை என் கர்த்தராகக் கொண்டு, பின்பற்ற விரும்புகிறேன். நீர் விரும்புகிறபடி என்னை மாற்றும். |
| **சார்ந்திருத்தல்** | என்னை உம் பரிசுத்த ஆவியால் நிரப்பும். எனக்காக நீர் வைத்திருக்கும் திட்டங்களை அறிய விரும்புகிறேன். |
| **தாக்கம்** | என்னை உம்முடைய கிருபை, சத்தியம், மற்றும் நீதியின் தூதுவனாக்கும். |
| **சீஷராக்குதல்** | என்னை உம்முடைய மகிமைக்காகவும், பிறர் உம்மைப் பின்பற்ற அழைக்கும்படியும் பயன்படுத்தும். |
| **அதிகாரம்** | இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென். |

# மனன வசனங்கள்

**காணாமல் போன ஆடு உவமை • லூக்கா 15:1-7** | நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை —1 யோவான் 3:1

**ஆபிரகாமின் கதை • ஆதியாகமம் 12:1-5** | உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. —மத்தேயு 22:37, 38.

**நல்ல சமாரியன் • லூக்கா 10:25-37** | நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. —யோவான் 15:12

**மன்னிக்காத வேலைக்காரன் உவமை • மத்தேயு 18:21-35** | என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். —சங்கீதம் 51:2

**கிறிஸ்து பிறப்பு கதை • லூக்கா 2:1-20** | கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன். —சங்கீதம் 9:1

**பேதுரு குறைவுள்ளவராக இருந்தார் • லூக்கா 22:54-62** | ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். —லூக்கா 9:23

**தேற்றரவாளன் • யோவான் 14:15-31** | ஆவியினால் நிறைந்து.. —எபேசியர் 5:18 ஆ

**இயேசுவும், சிறுபிள்ளைகளும் • மத்தேயு 18:1-6** | கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. —யோவான் 1:14

**தர்ஷீஸைச் சேர்ந்த சவுல் பவுல் ஆகிறார் • அப்போஸ்தலர் 9:1-22** | ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து.. —மத்தேயு 28:19

**பர்திமேயு குருடன் • மாற்கு 10:46-52** | ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். —பிலிப்பியர் 2:9,11ஆ

3-ஆம் பதிபபு

இதரச் செயல்பாடுகள்

புதிய வடிவமைப்பு

# ஜெப உடன்படிக்கை

பிள்ளைகளுக்கான | சிறுபிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்பித்தல்!





## கேன்டி மார்பளி

மற்றும் ஸ்டீஃபன் ஐரே

உதாரணங்கள்: லூக் ஃப்ளவர்ஸ் | முன்னுரை: ஜெரி கர்க்

**The Prayer Covenant Inc.**
P.O. Box 40841
Cincinnati, OH 45240
**www.theprayercovenant.org**

Copyright © 2014 by Candy Marballi. All rights reserved.
©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.

All rights reserved. No part of this book may be produced by any means, electronic, mechanical, photocopying, scanning, or otherwise, without permission in writing from the publisher, except by a reviewer, who may quote passages in a review. The Prayer Covenant Card may be copied but not altered, edited, or amended and is also available online with free downloads at **www.theprayercovenant.org/children**.

Materials to supplement *The Prayer Covenant for Children* are available at www.theprayercovenant.org, including free multiple-language versions of *The Prayer Covenant Children prayer* cards, *The Prayer Covenant for Children* 24 page booklet and *The Prayer Covenant for Children Coloring Book*. Special discounts are available for bulk purchases.

Unless otherwise stated, biblical quotations are taken from THE HOLY BIBLE, NEW INTERNATIONAL VERSION®, NIV® Copyright © 1973, 1978, 1984, 2011 by Biblica, Inc.™ Used by permission. All rights reserved worldwide.

Design by Sound Press and Granite Creative, inc

ISBN 978-0-9899525-8-3

Third Printing 2019
Printed in Mexico

# பொருளடக்கம்


சிறுபிள்ளைகள் ஜெபம் ........ 1
ஏற்புரைகள் ........ 6
அர்ப்பணம் ........ 8
முன்னுரை ........ 9
அறிமுகம் ........ 10
மாதிரிப் பாடம் ........ 12

கிருபை ........ 18
அன்பு ........ 26
மனதுருக்கம் ........ 34
மனந்திரும்புதல் ........ 42
ஆராதனை ........ 50
அர்ப்பணிப்பு ........ 58
சார்ந்திருத்தல் ........ 66
தாக்கம் ........ 74
சீஷராக்குதல் ........ 82
அதிகாரம் ........ 90

என் ஜெப உடன்படிக்கை பதிவு ........ 98
வண்ணந்தீட்டும் பக்கங்கள் ........ 99
படைப்பு முதல் கிறிஸ்து வரை-கையசைவுகள் ........ 109

# ஏற்புரைகள்

“சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை” யுடன் பங்காளராக இருப்பதை பிப்ளிக்கா – த இன்டர்நேஷனல் பைபிள் சொசைட்டி மகிழ்ச்சியாகவும், கனமாகவும் கருதுகிறது. சிறுபிள்ளைகள் எதிர்காலச் சபையின் தலைவர்கள் மட்டுமல்ல, இன்றைய உலகில் சபையில் பங்கேற்பவர்களும், பெரும்பான்மையானவர்களும் அவர்களே. சிறுபிள்ளைகளின் ஜெபங்கள் உலகெங்கும் உள்ளவர்களை கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களாக மாற்றும் வல்லமையும், நித்திய தாக்கமும் கொண்டவையாக இருக்கின்றன. இந்தப் புத்தகம் அந்தப் பணியை நிறைவேற்றுகிறது!

– லாரியூ ஆன்டர்சன், சீனியர் டைரக்டர் க்ளோபல் பார்ட்னர்ஷிப்ஸ், பிப்ளிக்கா – த இன்டர்நேஷனல் சொசைட்டி.

சிறுபிள்ளைகள் மீது கவனத்தைத் திருப்பும் நேரம் இதுவே, அவர்களே விசுவாச விளக்கை எடுத்துச் சென்று உலகத்தை மாற்றக் காத்திருக்கும் புதிய தலைமுறையினர். சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை, இந்த மாற்றத்தைத் தூண்டிவிடும் தீப்பொறியாக இருக்கிறது. ஜெபத்தின் மூலம் சிறுபிள்ளைகள் எழும்பி, அநேகருடைய வாழ்க்கையை மறுரூபமாக்குகிறார்கள். ஜெப உடன்படிக்கை, இயேசு கற்பித்த மிக முக்கியமான மைய மதிப்புகளில் ஒன்றான ஜெபத்தை நாம் இழந்திருக்கும் இந்தக் காலக்கட்டத்தில், உலகெங்குமுள்ள சிறுபிள்ளைகளை எழுப்புவதற்கான ஒரு கிரியா ஊக்கியாக விளங்கும். தேவனுடைய அழைப்பாக விளங்கும் ஜெப உடன்படிக்கையை கேன்டி மார்பளி நன்றாக எழுதி அமைத்திருக்கிறார். அவர், உலகெங்கும் ஆராதனை செய்து, பாரிந்து பேசும் ஒரு புதிய தலைமுறையை எழுப்பும்படி நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

– லூயிஸ் புஷ், இன்டர்நேஷனல் ஃபெசிலிடேட்டர், TWC, செர்வன்ட், ட்ரான்ஸ்ஃபார்ம் வேர்ல்ட் 2020; கோ-ஃபௌண்டர் 4/14 மூவ்மென்ட் பாஸ்டர் நாம் சூ கிம் அவர்களுடன்.

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை, ஜெபத்தின் மூலம் கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் கட்டி எழுப்பும் பணியில் சிறுபிள்ளைகளின் இருதயங்களை ஈடுபடுத்துவதற்கான தைரியமான ஒரு சவால். இந்தப் பயனுள்ள கருவியை அமைத்ததற்காக நன்றி, கேன்டி.

– கோரி L. ஃப்ராஸ்ட், வைஸ் பிரசிடென்ட், மிட்வெஸ்ட் ரீஜன் அன்ட் ப்ரேயர் நார்த் அமெரிக்கன் மிஷன் போர்ட்

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை ஒரு தனித்துவமிக்க, அருமையான புத்தகம்! அதன் கவனம், தெள்ளத் தெளிவு, மற்றும் ஆழ்ந்த எளிமையின் ஆற்றல் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒரு மாபெரும் ஈவு! தேவனுடைய வார்த்தையில் வேரூன்றி, கிறிஸ்துவின் மகிமைக்காக அபிஷேகத்துடன் ஊழியம் செய்யும்படியான சிறுபிள்ளைகளின் ஒரு தலைமுறையை எழுப்ப தேவன் இந்தப் புத்தகத்தைப் பயன்படுத்துவார் என்று நம்புகிறேன்! ஒரு தகப்பனாகவும், ஜெபிக்கும் மேய்ப்பனாகவும் இந்தப் புத்தகத்தை அதிகமாகப் பரிந்துரை செய்கிறேன்! ஜெபத்தில் நம் பிள்ளைகளுடன் இணைந்து இயேசுவைப் பின்பற்றுவோமாக!

– Dr. ஜேசன் ஹப்பர்ட், டைரக்டர் ஆஃப் லைட் ஆஃப் த வேர்ல்ட் ப்ரேயர் சென்டர்

இந்தப் புத்தகம் நல்ல உதாரணங்களுடன் அழகாக எழுதப்பட்டு, உலகெங்கும் உள்ள சிறுபிள்ளைகளுக்கு வழிகாட்டியாகவும், சபைகளிலும், பள்ளிகளிலும், குடும்பங்களிலும் நிச்சயமாக வைத்திருக்க வேண்டிய புத்தகமாகவும் விளங்குகிறது. இது ஈடுபாடு கொள்ளச் செய்வதாகவும், நடைமுறையானதாகவும் உள்ளது.

– ராபர்ட் A. மெக்டொனால்ட், ரிட்டையர்ட் சேர்மன், பிரசிடென்ட் அன்ட் சீஃப் எக்ஸிக்யூடிவ் ஆஃபீசர் ஆஃப் த ப்ராக்டர் & காம்பிள் கம்பெனி

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை உடனடியாக ஈடுபாட்டை ஏற்படுத்துகிறது. ஆசிரியர்களுக்கு மிக எளிதானதாக விளங்கும் இது, ஜெபம், வேதவசனங்கள், மற்றும் செய்முறைப் பயிற்சிகள் நேர்த்தியாக சமநிலையில் உள்ள பாடங்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. சிறப்பாக விற்பனையாகும் சிறுபிள்ளைகளுக்கான புத்தகமாக இருப்பினும், இதை முழுமையான அம்சங்களைக் கொண்டதொரு ஞாயிறு பள்ளி புத்தகமாகவும் பயன்படுத்தலாம். சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, ஏனென்றால் இதில் ஆழமான வேதாகமச் சத்தியங்கள் எளிதாகவும், விளையாட்டு முறையிலும் கொடுக்கப்பட்டிருப்பதோடு, இது சிறுபிள்ளைகளுக்கு தேவனுடன் பேசுவதான அற்புதமான மற்றும் வல்லமையான அனுபவத்தையும் அறிமுகப்படுத்துகிறது! இது, வாசகர்கள் தங்கள் வாழ்வில் தேவனுடைய நன்மையை அனுபவிக்க அழைப்பதோடு, மனுக்குலத்துடன் தேவன் செய்திருக்கும் உடன்படிக்கையின் பிரம்மாண்டமான கதையைக் காணக்கூடிய விதத்தில் விளக்குகிறது. எல்லா வயதைச் சேர்ந்த பிள்ளைகளுக்காகவும் ஒவ்வொரு பாடத்திலும் ஏதோ ஒன்று கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்புத்தகம், வேடிக்கையானதாகவும், பல்நோக்குடையதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கிறது.

– ஜோஷுவா மகோஹனி, ரிசோர்ஸ் மானேஜர் – எவ்ரி ஹோம் ஃபார் க்ரைஸ்ட்

# ஏற்புரைகள்

பெந்தகொஸ்தே நாளில், அப்போஸ்தலனாகிய பேதுரு, தேவராஜ்யத்தின் குடியுரிமையும், பரிசுத்த ஆவியின் வரங்களும் நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் உரியது (அப். 2:39) என்பதை உறுதி செய்தார். சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை, இந்த வாக்குத்தத்தம் அந்தக் காலத்தைப் போலவே இன்றைய சபைக்கும் மிகப் பொருந்துவதாகவும், மெய்யானதாகவும் இருப்பதை எடுத்துக் காண்பிக்கிறது.

– சிட்னி முய்ஸ்யோ, வைஸ் பிரசிடன்ட் ஃபார் ஆஃப்ரிக்கா ரீஜன், கம்பாஷன் இன்டர்நேஷனல்

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கையுடன் சேர்ந்து ஜெபிப்பது ஒரு அற்புதமான சிலாக்கியம். அதனால், எங்குமுள்ள யாவரும் இயேசுவை அறிந்து கொள்ள முடியும்! சிறுபிள்ளைகளின் ஜெபம் நமக்குள் ஒற்றுமையைக் கொண்டு வந்து, தேவனுடைய இருதயத்தைத் தொடுகிறது!

– செரி ஆஸ்டர்லோ க்ளோபல் ப்ரேயர், ஜீசஸ் ஃபில்ம் ப்ராஜக்ட்

சிறுபிள்ளைகள் தங்கள் ஜெப வாழ்க்கையில் பயன்படுத்தும் விதத்தில் ஜெப உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதால் மகிழ்கிறேன். உலகெங்கும் உள்ள சிறுபிள்ளைகளை ஜெபிக்கும் ஒரு வாழ்க்கை வாழும்படி ஆயத்தப்படுத்துவதில் இந்த ஜெப உடன்படிக்கை முக்கிய பங்கு வகிக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, "வாருங்கள், சிறுபிள்ளைகளே, ஜெபித்து, தேவனை ஆராதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று உரக்க அறிவிக்கிறோம்.

– Dr. லோ ஷரி, டைரக்டர் ஆஃப் க்ளர்ஜி டெவலப்மென்ட் / ப்ரேயர் மினிஸ்ட்ரி, இன்டர்நேஷனல் பென்டிகாஸ்டல் ஹோலினஸ் சர்ச்

சிறுபிள்ளைகள் தம்மிடம் வர வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். எல்லாக் காலத்தைச் சேர்ந்த சிறுபிள்ளைகளும் அவரை நெருக்கமாக அறிவதற்கான வழியை மட்டுமல்ல, பிறருடன் சேர்ந்து ஜெபித்து, பகிர்ந்து கொள்வதன் மூலம் சந்தோஷமாக அவரைப் பின்பற்றுகிறவர்களாகவும் மாற சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை வழிவகுக்கிறது. கேன்டி, இந்த அருமையான புத்தகத்திற்காக உங்களுக்கு நன்றி!

– டயன் ஸ்டீன்பார்ன், டைரக்டர்'ஸ் ஆஃபீஸ் ஆஃப் ஜீசஸ் ஃபில்ம், ப்ராஜக்ட் கேடலிஸ்ட்

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை பல ஊழியங்களுடன் இணைந்து எல்லா இடங்களிலும் வாழ்க்கை மாற்றங்களைச் செய்து வருகிறது. (இப்போது மேலும் சிறப்பான) பயனுள்ள இந்த ஜெபப் புத்தகம், "கர்த்தாவே, என்னை உம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்பும்!" என்று ஏற்கனவே ஜெபித்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கானவர்களுடன் இணைந்து கொள்ளும்படி உலகெங்கும் உள்ள சிறுபிள்ளைகளுக்குத் தூண்டுதலாக அமையும் என்பதை நினைத்துப் பார்க்கவே பரவசமாக இருக்கிறது.

– கிரெக் ஸ்டஃப்டன், பார்ட்னர்ஷிப் அன்ட் ப்ராஜக்ட் கோஆர்டினேட்டர், ஆஃபீஸ் ஆஃப் த பிரசிடென்ட் ஃபார் க்ரூ

ஜெபத்தின் தேவையையும், ஜெபிக்கும் விதத்தையும், ஜெபத்தின் வல்லமையையும் சிறுபிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது பெரிய அளவில் அவர்களுடைய வாழ்க்கையை மாற்றும்! இந்தப் புத்தகம் சிறுபிள்ளைகளுக்கு ஜெபத்தின் முக்கியத்துவத்துடன், அவர்கள் மீதான தேவனுடைய அன்பையும், கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொடுக்கிறது.

– தாமஸ் E. ட்ராஸ்க், ஃபார்மர் ஜென்ரல் சூப்பரின்டெண்டென்ட் ஆஃப் த அசெம்ப்ளிஸ் ஆஃப் காட்

உலகத்தைக் கலக்குகிற சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களைக் கொண்ட ஒரு தலைமுறையை தேவன் எழுப்பிக் கொண்டிருக்கிறார். சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை, அனுதினமும் அவர்கள் தங்களுக்காகவும், பிறருக்காகவும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஜெபிக்கக் கற்றுக்கொள்ள உதவும் அருமையான புத்தகமாக இருக்கிறது. எத்தனை அருமை! எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! என் நண்பர்கள் மற்றும் உடன் பணியாளர்களுடன், குறிப்பாக இளைஞர்களுடன் இதைப் பகிர்ந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். நீங்களும் அவ்வாறு செய்யும்படி உற்சாகப்படுத்துகிறேன்.

– டாம் விக்டர், பிரசிடென்ட், த க்ரேட் கமிஷன் கோலிஷன், ஃபெசிலிடேட்டர், 4 டு 14 வின்டோ நார்த் அமெரிக்கன் ரீஜன்

சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை நம் பிள்ளைகளுக்குள் சர்வ வல்லமையுள்ள தேவன் மீதான அன்பையும், நெருக்கத்தையும் உண்டாக்க உதவும் வேதத்தின் அடிப்படையிலான ஒரு அற்புதமான கருவியாக இருக்கிறது. இது, எல்லா விசுவாசிகளும், தங்கள் பிள்ளைகள் பிரதான கற்பனைக்கும், பிரதான கட்டளைக்கும் தீவிரமாகக் கீழ்ப்படிவதை ஆவலுடன் நாடும் விதத்தில் அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, சீஷர்களாக்க உற்சாகப்படுத்தும் என்று நம்புகிறேன். கிறிஸ்துவின் சரீரத்திற்கு கிடைத்த இந்த மாபெரும் ஈவுக்காக உங்களுக்கு நன்றி!

– K. மார்ஷல் வில்லியம்ஸ் Sr., சீனியர் பாஸ்டர், நஸரீன் பாப்டிஸ்ட் சர்ச், ஃபிலடெல்ஃபியா PA, மற்றும் பிரசிடென்ட், நேஷனல் ஆஃப்ரிக்கன் அமெரிக்கன் ஃபெல்லோஷிப், SBC

# அர்ப்பணம்

எனக்கு அன்பும், ஆதரவும், உற்சாகமும் கொடுத்த என் அன்பான கணவர் விக் மற்றும் எங்கள் பிள்ளைகள் ஜோனத்தான் மற்றும் மாரியா ஆகியோருக்கும்,

இந்தச் செயல்திட்டத்தில் கிருபையாகத் தன் நிபுணத்துவத்தையும், வழிநடத்துதலையும், அர்ப்பணிப்பையும் பகிர்ந்து கொண்ட என் உடன் ஆசிரியரான ஸ்டீஃபன் ஐரே அவர்களுக்கும்,

உலகெங்கும் உள்ள சிறுபிள்ளைகளுக்கு 40 நாள் ஜெப உடன்படிக்கை என்னும் தரிசனத்தைக் கொடுத்து, தாராளமாகவும், உறுதியாகவும் உதவிய ஜெரி கர்க் அவர்களுக்கும்,

சிறுபிள்ளைகள் ஜெபத்தை உருவாக்க உதவிய பெண்கள் குழுவிலுள்ள பெண்கள் அனைவருக்கும்: ஏமி கர்க், ஷேரன் மேசன், ஸ்டெஃபானி ப்ளான்கொவிட்ச், ஷேரன் சாட்ஸ், மற்றும் கேட்டி ஸ்டீலே ஆகியோருக்கும்,

சிறுபிள்ளைகள் ஜெபத்தை உருவாக்க உதவிய பெண்கள் குழுவிலுள்ள பெண்கள் அனைவருக்கும்: ஏமி கர்க், ஷேரன் மேசன், ஸ்டெஃபானி ப்ளான்கொவிட்ச், ஷேரன் சாட்ஸ், மற்றும் கேட்டி ஸ்டீலே ஆகியோருக்கும்,

தகவலும் ஆதரவும் வழங்கிய 4/14 இயக்கத்தைச் சேர்ந்த இர்மா ஷோன் மற்றும் கேட்டி ஸ்டீலே ஆகியோருக்கும் இப்புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன்.

# முன்னுரை

45 ஆண்டுகளுக்கு மேலாக நான், பெரியவர்களுக்கான ஜெப உடன்படிக்கை அமைப்பில் ஈடுபட்டு வருகிறேன். தேவன் அந்த ஊழியத்தை எப்படி ஆசீர்வதித்து விரிவாக்கியிருக்கிறார் என்பதைப் பார்த்து எப்போதும் மகிழ்ந்திருக்கிறேன். இருப்பினும், சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை என்பது தேவன் ஆச்சரியமாகக் கொடுத்த இன்ப அதிர்ச்சிகளில் ஒன்றாக இருக்கிறது. கேன்டி மார்பளி தன் தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளும் வரை இது எனக்குத் தோன்றவேயில்லை. சிறுபிள்ளைகள் ஊழியத்தில் நிபுணர்களாக இருப்பவர்களைக் கொண்டு ஒரு குழுவை உருவாக்கும்படி கேன்டியை கர்த்தர் வழிநடத்தினார்.

கேன்டியும் அவரது குழுவும் சிறுபிள்ளைகள் ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்திருந்தபடியால், ஜெப உடன்படிக்கையை சிறுபிள்ளைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்க ஆவல் கொண்டார்கள். ஜெப உடன்படிக்கையின் சிறுபிள்ளைகள் பதிப்பை தயாரித்த பின்னர், கேன்டியும் மற்றவர்களும் இந்தப் புத்தகத்தின் தேவையை உணர்ந்தார்கள். பெரியவர்களுக்கான பதிப்பைப் போல, சிறுபிள்ளைகள் ஜெப உடன்படிக்கையும் ஜெபத்தை வழிநடத்தி, மேம்படுத்தும். இதன் பெயரில் இருப்பது போல, இது சிறுபிள்ளைகளுக்காக எழுதப்பட்டது. சிறுபிள்ளைகளின் தேவையுள்ள இடங்களில் சரியாக அவர்களைச் சந்திக்கும் இப்புத்தகம், அவர்களை அங்கேயே விட்டுவிடுவதில்லை. இது, சிறுபிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகச் சரியாக உதவும் அழகான, சுருக்கமான, நேரடியான, மற்றும் சவாலான ஜெபம்.

இந்தப் புத்தகம் முக்கியமாக சிறுபிள்ளைகளுக்காக எழுதப்பட்டது. ஆனால், பெற்றோர்களுக்கும் இது ஆசீர்வாதமாகவும், மேம்படுத்துவதாகவும் அமையும் என்று நான் விசுவாசிக்கிறேன். அதன் மூலம் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருக்கலாம். இது, ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும் விதத்தில், அவர்களையும் மேம்படுத்தி, ஆசீர்வாதமாக அமையும். சபை மேய்ப்பர்கள் கிறிஸ்தவ கல்வி முறை முழுவதற்கும் ஆசீர்வாதமாக விளங்கும் விதத்தில் அவர்களுக்கும் இது ஆசீர்வாதமாக இருக்கும். சிறுபிள்ளைகள் ஜெபிப்பது இயல்புதான்; அதுவும் பிள்ளைகள் தாங்கள் நம்பி, நேசிக்கும் தங்கள் பெற்றோருடன் சேர்ந்து ஜெபிப்பது இயல்பே. பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை கொடுப்பது செயல்படுவதற்கான ஒரு தடம். அது, தேவனுடைய அன்பிற்கும், ஒவ்வொரு பிள்ளைக்கும் தேவையான சமாதானத்திற்கும் நேராக அவர்களை நடத்திச் செல்லும் ஜெப வடிவிலான வழி. துவக்கத்தில், சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை நல்லதொரு கருத்தாக மட்டும் தோன்றியது. ஆனால் இப்போது, சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கையைத் தயாரித்தது எங்களுடைய தலைமைத்துவக் குழுவினர் எடுத்த மிக முக்கியமானத் தீர்மானங்களில் ஒன்று என்று நம்புகிறேன். இது, உலகெங்கும் ஜெப உடன்படிக்கை என்னும் அக்கினியைப் பற்ற வைக்கும் தீப்பெட்டியாக இருக்கும்!

# அறிமுகம்

## சிறுபிள்ளைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தல்

லூக்கா எழுதிய சுவிசேஷத்தின் 11 -ஆம் அதிகாரம் "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபம் பண்ணக் கற்றுத்தாரும்" என்னும் சீஷர்களின் எளிய வேண்டுகோளுடன் தொடங்குகிறது. 2014 ஆம் ஆண்டு, நியூயார்க் பட்டணத்தில் நடந்த 4/14 பெஸ்ட் ப்ராக்டிசஸ் மாநாட்டில், "சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை" என்னும் இப்புத்தகத்தின் முதல் பதிப்பை வெளியிடுமாறு டாம் விக்டர் அவர்கள் எங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதுமுதல், சிறுபிள்ளைகளுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் மனதை சீஷத்துவத்திற்கு நேராகத் திருப்பும் விதத்தில் அவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கவும் தேவன் இப்புத்தகத்தைப் பயன்படுத்தி வருகிறார். சிறுபிள்ளைகள் ஜெபத்திற்கு பதிலைப் பெற்று அதன் வல்லமையை அனுபவிக்கும்போது, பரவசமடைகிறார்கள்; அவர்களுடைய விசுவாசம் வலுவடைகிறது; மற்றும் அதிகமாக ஜெபிக்க விரும்புகிறார்கள்.

ஜெபம் என்பது மிக முக்கியமான ஆவிக்குரிய ஒழுங்குகளில் ஒன்றாக இருக்கிறது, ஏனெனில் ஜெபம் இயேசுவுடனான நம் உறவை போஷித்து வளர்க்கிறது. நாம் இயேசுவுடன் எந்த அளவுக்கு நேரம் செலவிடுகிறோமோ, அந்த அளவுக்கு அவருடைய கிருபை, அன்பு, மனதுருக்கம் மற்றும் மன்னிப்பினால் நிறைந்து அவரைப் போல மாறுகிறோம். இந்தப் புத்தகம், உலகெங்கும் உள்ள சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களிடையே ஒரு ஜெப இயக்கத்தை உருவாக்கி, உண்மையான சீஷத்துவத்தின் மதிப்பையும், அனுதினமும் ஜெபத்தில் தேவனுடன் நேரம் செலவிட அவருடைய பிள்ளைகளாகிய நமக்குக் கிடைத்துள்ள சிலாக்கியத்தையும் அறிந்து, இயேசுவைப் பின்பற்றும் ஒரு தலைமுறையினரை எழுப்ப உதவ வேண்டும் என்பதே எங்கள் ஜெபம்.

இந்த ஜெபப் பயணத்தைத் தொடங்கவிருக்கும் சிறுபிள்ளைகள் வல்லமையான விதங்களில் தேவனை அறிந்து அனுபவிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களுக்கு இணங்கவும் வேண்டும் என்று விரும்புகிறோம்.

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியின் மூலமாகத் தம் பிள்ளைகளுடன் எண்ணற்ற வழிகளில் பேசுகிறார். ஜெபத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறையைத் தொடங்கும் பிள்ளைகள் செவிகொடுக்கக் கற்றுக்கொள்வது எப்படி என்று கண்டுகொள்வார்கள். ஜெப ஊக்குவிப்பாளரான கொலின் மில்லர், "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்" (சங்கீதம் 46:10) என்ற வசனத்தின் அடிப்படையில், "தேவனுக்கு மேலான ஐந்தைக் கொடு" என்ற திட்டத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார். அது, உன்னதமான தேவனுடன் அமைதியாக அமர்ந்திருப்பதற்கு ஐந்து நிமிடம் கொடுக்க விடுக்கும் அழைப்பு. சிறுபிள்ளைகளுக்கும், வாலிபப் பிள்ளைகளுக்கும் இது என்னவொரு அருமையான கருத்தாக அமையும்! தேவனுக்கு முன்பாக ஐந்து நிமிடங்கள் மட்டும் அமர்ந்திருந்து, அவர் சொல்வதை அல்லது செய்யும்படி உணர்த்துவதைக் கேட்க, சிறுபிள்ளைகளுக்கு அழைப்புவிடுங்கள். சார்ந்துகொள்ளுதல் பற்றிய அத்தியாயத்தில் இதைப் பற்றி மேலும் விபரமாகப் பார்ப்போம். தேவனுக்குச் செவிகொடுப்பது நம் ஜெபங்களை விட மிக முக்கியமானது. அவர் தம் வார்த்தையின் மூலமாகவும், தம் பரிசுத்த ஆவியின் மென்மையான ஏவுதல்கள் மூலமாகவும் பேசுகிறார். வேதத்தில், சிறு சாமுவேல் தேவனுடைய சத்தத்தை அறியக் கற்றுக் கொண்டான், அதனால் தேவன் அவனை ஒரு தேசத்தையே நடத்திச் செல்லப் பயன்படுத்தினார்.

# அறிமுகம்

## ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுதல்

உங்கள் பிள்ளைகள், “உடன்படிக்கை என்றால் என்ன?” என்று கேட்கலாம். அது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் தங்களுக்குள் கொடுத்துக் கொள்ளும் ஒரு வாக்குறுதி – அவர்கள் தீர்மானிக்கும் நேரத்தில் ஒருவருக்கொருவர் ஜெபிப்பதற்கான வாக்குறுதி. பிள்ளைகள் தொடர்பு கொள்கிறவர்களாக இருப்பதால், ஓரிருவருக்காக ஜெபிப்பது அவர்களுக்கு விளையாட்டாகவும், புரிந்து கொள்ள எளிதாகவும் இருக்கும். ஒவ்வொரு பாடமாகப் படிக்க வைக்கும் நீங்கள் அவர்களிடம், “நீ ஜெப உடன்படிக்கைச் செய்து கொள்ளும்படி தேவன் உன் மனதில் வைப்பவர் யார்?” என்றும், “தம்மைப் பற்றி நீ பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று எவ்விதங்களில் தேவன் உன்னுடன் பேசுகிறார்?” என்றும் கேட்க மறந்துவிடாதீர்கள்.

பிள்ளைகள் பெரும்பாலும் தங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், மற்றும் நண்பர்களிடம்தான் உடன்படிக்கையைத் தொடங்குவார்கள். அவர்களால் எந்த நேரத்திலும் புதிய ஜெப உடன்படிக்கைகளைத் தொடங்க முடியும். பிள்ளைகள் ஜெபத்தைத் தங்கள் வாழ்க்கைமுறையாகக் கொள்ள வேண்டும் என்பதே இதன் இலக்கு. பெரும்பாலும், சிறுபிள்ளைகளே தங்கள் வீடுகளில் ஜெபத்தை நடத்தத் தொடங்குகிறவர்களாக இருக்கிறார்கள்.

புதிய வடிவமைப்பு உங்களுக்குப் பிடிக்கும் என்று நம்புகிறோம். கிருபை, அன்பு, மனதுருக்கம், மனந்திரும்புதல், ஆராதனை, அர்ப்பணிப்பு, சார்ந்திருத்தல், தாக்கம், சீஷராக்குதல், மற்றும் அதிகாரம் ஆகியவைகளை உள்ளடக்கிய சீஷத்துவத்தைப் பற்றிய 10அத்தியாயங்களிலும் இந்த வடிவமைப்பைக் காணலாம். பரவசமூட்டும் பாடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வேதாகமக் கதையும், மனன வசனமும், பயிற்சித்தாளும், பாப்கார்ன் ஜெபமும், வேடிக்கை விளையாட்டும், ராப் பாடலும் கொடுக்கப்பட்டுள்ளன. பின்வரும் 10 உருவப்படங்களை ஒவ்வொரு பாடத்திலும் கவனியுங்கள்.




உன்னால் சொல்ல முடியுமா? | உன்னால் கண்டுபிடிக்க முடியுமா? | உன்னால் உணர முடிகிறதா? | பாப்கார்ன் ஜெபம் | பேசு! | உன்னால் கேட்க முடிகிறதா? | உன்னால் செய்ய முடியுமா? | விளையாடு! | பயிற்சித்தாள் | ராப் பாடல்!

இதன் பாடத்திட்டம் மிக எளிதானது. ஞாயிறு பள்ளி, அல்லது விடுமுறை வேதாகமப் பள்ளி, அல்லது சிறுகுழு என எங்கு இதைப் படிக்கப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். இதை இரண்டு பகுதியாகப் படித்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறோம். முதல் 10 வாரங்களில் 10 கருப்பொருட்களையும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். பின்னர், அவர்கள் ஒரு நண்பனுடனோ அல்லது குடும்பத்தினருடனோ உடன்படிக்கை ஏற்படுத்துமாறு செய்யுங்கள். பாடத்திட்டத்தை முடித்தவுடன், வகுப்பில் ஜெபம் செய்வதற்கு முன்னுரிமை கொடுங்கள். பாடல் ஆராதனைக்கு நேரம் கொடுப்பது போல, ஒவ்வொரு வாரமும் ஜெப ஆராதனைக்கு நேரம் ஒதுக்குங்கள். பிள்ளைகள் பின்வருவனவற்றைப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்:

- தேவன் எவ்வாறு அவர்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்
- அவர்கள் ஜெபிக்கும் நபரை தேவன் எவ்வாறு மாற்றிக் கொண்டிருக்கிறார்
- தேவன் எவ்வாறு அவர்களுடன் பேசுகிறார்
- ஜெபத்திற்கான பதில்
- ஜெப விண்ணப்பங்கள்



# கிருபை

## செய்முறை 1: உன்னால் சொல்ல முடியுமா?

செய்முறை 1

**ஜெபத்தை மனனம் செய்தல்**

அன்பான பரம தகப்பனே, என்னை நேசித்து, உம்முடைய பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி.

ஜெபம் முழுவதையும் எல்லோரும் சேர்ந்து வாசிக்கவும் – கிருபை என்னும் இந்தக் கருப்பொருளில் கவனம் செலுத்துங்கள்.

ஜெபத்தை எல்லோரும் சேர்ந்து பாடலாகப் பாடவும்.
(இசைப் பதிவை இசைக்கவும்)

### தொடர்புடைய வேதவசனத்தை மனனம் செய்தல் (1 யோவான் 3:1)

**புதிர் செய்முறை**
ஒவ்வொரு வார்த்தையும் வெவ்வேறு புதிர் துண்டில் இருக்கும். வசனத்தை நிறைவு செய்ய, பிள்ளைகள் அவற்றைச் சரியான வரிசையில் சேர்க்க வேண்டும்.

**வெள்ளைப் பலகைச் செய்முறை**
பயிற்சியாளர் வசனம் முழுவதையும் வெள்ளைப் பலகையில் எழுதியிருப்பார். பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து அதை வாசிக்க வேண்டும். பின்னர், பயிற்சியாளர் ஒவ்வொரு வார்த்தையாக அழித்துக் கொண்டே வந்து, இறுதியில் ஒரு வார்த்தையும் இல்லாமல் செய்து விடுவார். அப்போது, பிள்ளைகள் பார்க்காமல் அந்த வசனம் முழுவதையும் சொல்ல வேண்டும்.

**வரிசைப்படுத்து!**
பிள்ளைகளை வரிசையாக நிற்கச் செய்யுங்கள். ஒவ்வொரு பிள்ளையும் வசனத்தின் அடுத்தடுத்த வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். வார்த்தைகளைத் தவற விடுபவர்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும். (செய்வதற்கு கடினமாக இருக்கலாம்!)

*வசனத்தை மனனம் செய்பவர்களுக்கு சிறு பரிசுப் பொருட்களைக் கொடுக்கவும்.*

*“மனனம்” செய்யும் செய்முறைகளின்போது பிள்ளைகளை சுழற்சி முறையில் இடம் மாற்றிக் கொண்டிருங்கள்.*

## செய்முறை 2: உன்னால் கண்டுபிடிக்க முடியுமா?

வேதபாட நேரம் – தேவனுடைய வார்த்தையை ஆழமாக அறிந்து கொள்ளுதல். குறிப்பிட்ட கருப்பொருளுடன் தொடர்புடைய வேதவசனக் குறிப்புகளை வைத்திருங்கள். வேதவசனங்களை (மூன்று குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன) யார் முதலில் தேடி எடுக்கிறார்கள் என்று போட்டி வைத்து, எடுத்தவர்களை வாசிக்கச் சொல்லுங்கள்.

கிருபையைப் பற்றி வேதம் என்ன சொல்கிறதென்று கண்டுபிடியுங்கள்:

யோவான் 3:16

1 யோவான் 4:10

ரோமர் 8:38, 39

(இந்த வசனங்களையோ அல்லது வேறு வசனங்களையோ பயன்படுத்தலாம்)

இந்த வசனம் எனக்குச் சொல்வதென்ன?

இது என் வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்துகிறது?

கிருபையைப் பற்றி நான் கற்றுக் கொண்டது என்ன?

## செய்முறை 3: உன்னால் உணர முடிகிறதா?

கலந்துரையாடல் / பகிர்ந்து கொள்ளும் வேளை: நியாயந்தீர்க்காமல் இருக்க வேண்டிய பகுதி – பிள்ளைகள் தங்கள் விசுவாசத்தைப் பற்றிய சந்தேகங்களை வெளிப்படுத்தி, கேள்விகள் கேட்டு, தங்கள் பயங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் விசுவாசத்தைப் பற்றிய வித்தியாசமான கண்ணோட்டத்தைக் கொடுப்பார்கள். பிள்ளைகளுடன் பிள்ளைகளாக இருங்கள், உங்களைச் சற்று தாழ்த்திக் கொடுத்தால், பிள்ளைகள் நன்றாக ஈடுபடுவார்கள்.

கேள்விகள் பின்வருமாறு இருக்கலாம்:

1) தேவன் நம்மை நேசிக்கிறார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?

2) உன் அன்பை எப்படிக் காண்பிப்பாய்?

3) நீ நேசிக்கப்படுகிறாய் என்பதை எப்படி அறிந்து கொள்வாய்?

4) நம்மை தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுவது எது?

## செய்முறை 4: பாப்கார்ன் ஜெபம்

செய்முறை 4

இது பிள்ளைகள் சேர்ந்து ஜெபிப்பதற்கான ஒரு வாய்ப்பு. இதுவரை ஜெபம் செய்யும் பழக்கம் இல்லாதவர்களும், ஜெபிக்கக் கூச்சப்படுகிறவர்களும் இருக்கலாம். பாப்கார்ன் ஜெபமானது, ஜெபிப்பதை சுலபமாக்கி விடுவதோடு, ஒரு வார்த்தை ஜெபம் அல்லது சிறு வாக்கியங்களைக் கொண்ட ஜெபங்களைச் செய்வதன் மூலம் விளையாட்டாகவும் மாற்றிவிடுகிறது. தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்து, தொடங்குங்கள். அது தேவனை துதித்து, ஆராதிப்பதற்கும் வழிவகுக்கிறது. பிள்ளைகளுக்கு அது பிடித்துவிடும், மற்றும் சீக்கிரமாகச் செய்யவும் தொடங்குவார்கள். அவர்களுடைய ஜெபங்களில் ஒரு உற்சாக ஆவி இருப்பதைக் காண முடியும். நாள் போகப் போக, அவர்கள் சவுகரியமாக உணரத் தொடங்கி, வார இறுதியில் ஜெப விண்ணப்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு வந்துவிடுவார்கள்.

| |
|---|
| நம்முடைய நீதியாயிருக்கும் கர்த்தர் (யாவே சிட்கேனு) |
| இம்மானுவேல் (இம்மானுயல்) |
| பிதா (அப்பா) |
| நித்திய தேவன் (எல் ஓலாம்) |
| உன்னதமான தேவன் (எல் எலியோன்) |
| நியாயாதிபதி (ஷாஃபெட்) |
| கர்த்தர் என் மேய்ப்பர் (யாவே ரோஹி) |
| கர்த்தர் என் கன்மலை (யாவே சூரி) |
| கர்த்தர் என் சமாதானம் (யாவே ஷாலோம்) |
| வல்ல சிருஷ்டிகரான தேவன் (ஏலோஹிம்) |
| கர்த்தர் (யாவே) |
| என்னைக் காண்கிற தேவன் (எல் ரோய்) |
| சர்வ வல்லமையுள்ள தேவன் (எல் ஷடாய்) |
| கர்த்தர் அருளுவார் (யாவே யீரே) |
| குணமாக்கும் கர்த்தர் (யாவே ரோஃபே) |

“வண்ணமயமாக ஜெபித்தல்” என்பது மற்றுமொரு ஜெபச் செய்முறை. ஆராதனைப் பாடல்களை இசைக்கச் செய்து, பிள்ளைகளைப் புல்மேல் படுக்க வைத்து, வானம், மரங்கள், மேகங்கள் போன்ற தேவனுடைய சிருஷ்டிப்பைப் பார்த்து மகிழச் செய்யுங்கள். பின்னர், பிள்ளைகள் பெரிய வெள்ளைத் தாள்களில் (சார்ட் பேப்பர்) தேவன் தங்களோடு பேசுவதை விரும்பியபடி வரையச் செய்யுங்கள். அவர்கள் வண்ணமயமாக ஜெபிப்பதை விரும்புகிறவர்களாக இருப்பதால், அதன் மூலம் அவர்கள் பகிர்ந்து கொள்வதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும். இதைச் செய்து முடிக்க சுமார் 30 நிமிடங்கள் ஆகலாம்.

## செய்முறை 5: பேசு!

செய்முறை 5



தேவனுடைய அன்பைப் பற்றிப் பிள்ளைகள் தாங்கள் நினைப்பதை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்: தேவனுடைய அன்பைப் பற்றி அறிந்து கொள்ளும் பிள்ளைகள், தேவனுடைய அன்பு அல்லது சந்தோஷத்தைத் தாங்கள் இழந்து போவதைக் குறித்த பயங்களையும், கவலைகளையும் பகிர்ந்து கொள்ளட்டும்.

பின்வருவனவற்றைப் பற்றியும் பேசலாம்:

நாம் நேசிப்பதற்கு ஏற்ற விதத்தில் எதையும் செய்யாமல் இருக்கும்போதும் நேசிப்பதுதான் கிருபை எனப்படுகிறது.

நித்திய அன்பு என்றால் என்ன? என்றென்றும் முடிவடையாத அன்பு! நீங்கள் தவறு செய்தாலும் அது போகாது. நீங்கள் பயந்தாலும் அது போகாது.

உங்கள் பெற்றோர்கள் வேலை இழந்தாலும் அது முடிவுக்கு வராது ... அது முடிவடையாது (அவர்கள் கோடிட்ட இடத்தை நிரப்பும்படிச் செய்யுங்கள்).

என்ன நடந்தாலும், இயேசுவின் அன்பு ஒருபோதும் முடிவடையாது, ஒருபோதும் கைவிடாது.

## செய்முறை 6: உங்களால் கேட்க முடிகிறதா?

செய்முறை 6



பிள்ளைகளுக்கு கதை நேரம் மிகவும் பிடிக்கும். எனவே, அவர்களுக்கு கதையை வாசித்துக் காண்பித்து, கேள்வி கேளுங்கள். (15 நிமிடங்கள்)

நடிப்பதற்கு தானாக முன்வருபவர்களைக் கொண்டு வேதாகமக் கதையை ஒரு நாடகம் போல் நடித்துக் காண்பியுங்கள். எளிமையான ஆடை அலங்காரங்கள் போதும்! மேய்ப்பன் கையில் ஒரு கம்பைக் கொடுங்கள், வேதாகம காலங்களில் இருந்தது போல், தலைக்கு ஒரு துண்டையும், ஒரு நீண்ட அங்கியையும் போட்டுவிடுங்கள். (15 நிமிடங்கள்)

மறுபடியும் சொல்லும் விளையாட்டை விளையாடுங்கள். கதையின் பகுதிகளை எளிமையாக மீண்டும் மீண்டும் சொல்லி, பிள்ளைகள் மாறி மாறி முறை எடுத்து அதை மீண்டும் சொல்லச் சொல்லுங்கள். எட்டுப் பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, முதலில் இருக்கும் பிள்ளையிடம் ஒரு பந்தை வீசுங்கள். அந்தப் பிள்ளை கதையில் ஒரு வரியைச் சொல்லிவிட்டு, பந்தை அடுத்தப் பிள்ளையிடம் வீச வேண்டும். அடுத்தப் பிள்ளை அடுத்த வரியைச் சொல்ல வேண்டும். இப்படி பந்தை வீசிக் கொண்டே, கதையை ஒவ்வொரு வரியாகச் சொல்லி முடித்து விடுங்கள். (15 நிமிடங்கள்)

## செய்முறை 7: உங்களால் செய்ய முடியுமா?



நடைமுறைப்படுத்துதல்

செய்முறை 7

கலந்துரையாடல் நேரம்: பின்வரும் கேள்விகளை அல்லது நீங்கள் சொந்தமாகத் தயாரித்த கேள்விகளைப் பற்றிப் பேசுங்கள்.

இன்று நான் கற்றுக் கொண்டதை எப்படி என் வாழ்வில் பயன்படுத்த முடியும்?

கிருபையைச் செயல் வடிவில் எப்படிப் பார்த்தேன்?

பிறருக்கு கிருபையைக் காண்பிக்க நான் செய்ய வேண்டியது என்ன?

## செய்முறை 8: விளையாடு! (டிஜே விளையாட்டுகள் – கேம்லைஃப் –லிருந்து எடுக்கப்பட்டது)

செய்முறை 8



### “மேய்ப்பனும், மந்தையும்” விளையாட்டு

1. முக்கியக் குறிப்பு: இந்த விளையாட்டு, “இறைச்சியைத் திருடு” விளையாட்டில், “ஆடுகள்”, “ஓநாய்கள்” மற்றும் “மேய்ப்பன்” எனச் சிறு மாற்றங்கள் செய்து, நான்கு பக்கங்களை மட்டும் வைத்து விளையாடப்படுகிறது.
2. ஒரு பெரிய சதுர இடத்தைக் குறித்து, அதற்குள்தான் விளையாட வேண்டுமென்று சொல்லிவிடுங்கள். நடுவில், “காணாமல் போன ஆடு” நிற்பதற்கு ஒரு சிறு சதுரம் வரையுங்கள். காணாமல் போன ஆட்டைக் காவல் காக்க ஆறு ஓநாய்கள் இருக்க வேண்டும். பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் பிரித்து, பெரிய சதுரத்தின் நான்கு பக்கங்களிலும் நிற்க வையுங்கள்.
3. பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் (10 பேருக்குக் குறைவாக இருந்தால் இரண்டு குழுக்களாக) பிரித்ததும், ஒரே பக்கத்தில் விளையாடும் ஒவ்வொருவருக்கும் ஒரு எண் கொடுத்துவிடுங்கள். ஒவ்வொரு குழுவிலும், ஒன்று, இரண்டு, மூன்று, ... என்று எண்கள் இருக்கும்.
4. பயிற்சியாளர் “எண் ஒன்று” என்று கத்தும்போது, ஒவ்வொரு குழுவிலும் எண் ஒன்றைக் கொண்டவர்கள் ஓடிப் போய், நடுவிலிருக்கும் காணாமல் போன ஆட்டை மீட்க முயற்சி செய்ய வேண்டும். யாராவது ஓநாயிடம் பிடிபட்டால், அடுத்த சுற்று வரை விளையாட முடியாது.
5. முக்கியக் குறிப்பு: “மீட்கும் ஆடுகளை” விட அதிகமான ஓநாய்களை வையுங்கள்.
6. அதிகமான ஓநாய்கள் இருப்பதால், மற்ற ஆடுகளால் காணாமல் போன ஆட்டை மீட்க முடியாது.
7. முக்கியக் குறிப்பு: மீண்டும் இப்படியே விளையாடுங்கள்; இந்த முறை, பயிற்சியாளர்களில் ஒருவர் “நல்ல மேய்ப்பனாக” இருந்து, எந்த நேரத்திலும் “ஓநாய்களே, ஓடிவிடுங்கள்! ஆடுகளே வீடு திரும்புங்கள்!” எனக் கத்துவார் என்று சொல்லிக் கொடுங்கள். அப்போது, ஓநாய்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும், ஆடுகள் தங்கள் பக்கத்திற்குச் சென்று, மீண்டும் விளையாடத் தொடங்கலாம்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: நல்ல மேய்ப்பன் எப்போதும் ஆடுகள் தங்கள் வீட்டில் பாதுகாப்பாக இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்வார்.

## செய்முறை 9: பயிற்சித்தாள்

செய்முறை 9

பயிற்சித்தாள்களை ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒன்று என நகல் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். கைவினை வேலைகள் செய்ய பேனாக்கள், பென்சில்கள், வண்ணந்தீட்டும் பென்சில்கள், மற்றும் க்ரேயான்களை வைத்திருங்கள். கொடுக்கப்பட்ட கைவினைகளை மட்டும் செய்ய வேண்டும் என்றில்லை, நீங்களே சொந்தமாகச் செய்யலாம். பின்வரும் கேள்விகள் குறிப்பிட்ட ஒவ்வொரு கருப்பொருளையும் சீராய்வு செய்வதாக இருக்கும்.

1. ஜெபத்தின் முதல் வரியை நினைவுபடுத்தி, எழுத முடியுமா?

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1 யோவான் 3:1, ‘நாம் தேவனுடைய ________ அழைக்கப்படுவதினாலே ________ நமக்குப் ____________ எவ்வளவு ____________ பாருங்கள்.”

3. உங்களை என்றென்றைக்கும் தேவனுடைய பிள்ளையாக இருக்கச் செய்வது எது என்று உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்.

4. இயேசுவுக்கு உங்கள் பெயர் முதற்கொண்டு, உங்களைப் பற்றிய எல்லாம் தெரியும்! இதை அறிவதால் எப்படி உணருகிறீர்கள் என்பதை ஒரு வாக்கியத்தில் அல்லது ஒரு படம் வரைந்து விவரிக்கவும்.

5. பதில் நேரம்:

    நன்றியுள்ளவர்களாக இருப்பது நல்லது. அது இயேசுவுக்குப் பிரியமானது. இயேசுவுக்கு நீங்கள் ஒரு “நன்றி” குறிப்பு எழுத முடியுமா? (பிள்ளைகள் சொந்தமாக இயேசுவுக்கு நன்றி வாழ்த்து அட்டைத் தயாரிப்பதற்கு உதவியாக வண்ணத் தாள்கள், க்ரேயான்கள், மார்க்கர், பென்சில்கள், மற்றும் ஒட்டும் படங்கள் வைத்திருங்கள். அல்லது வேறு ஏதாவது கைவினையும் செய்யச் சொல்லலாம்.)

## செய்முறை 10: ராப் பாடல்!

செய்முறை 10

இது மற்றுமொரு சிறப்பு. ஒவ்வொரு கருப்பொருளின் நிறைவிலும் ஒரு ராப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பிள்ளைகள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த முடியும். ட்ரம்ஸ், கீபோர்ட் போன்ற இசைக்கருவிகளை வைத்திருங்கள். நீங்களாக உருவாக்கிய கருவியாக இருந்தாலும் பரவாயில்லை. ஒருவர் ராப் பாடலுக்குத் தலைமை தாங்கட்டும், மற்றவர்கள் அவருக்குப் பின்பாட்டுப் பாடட்டும். பாடல் வார்த்தைகள் புத்தகத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன. தலைவர்களை அவ்வப்போது மாற்றி விடுங்கள். பிள்ளைகள் தாங்களாகவே கிருபையைப் பற்றிய ராப் பாடலுக்கான வார்த்தைகளைக் கொடுக்கச் சொல்லலாம்.

# கிருபை

அன்பான பரம தகப்பனே,
என்னை நேசித்து, உம்முடைய
பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி



காணாமல் போன ஆடு உவமை • லூக்கா 15:1-7



1 யோவான் 3:1

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று
அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப்
பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.



# கிருபை

## உன்னால் சொல்ல முடியுமா?

அன்பான பரம தகப்பனே, என்னை நேசித்து, உம்முடைய பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி.

**1 யோவான் 3:1**
நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*யோவான் 3:16*
*1 யோவான் 4:10*
*ரோமர் 8:38-39*

## உங்களால் உணர முடிகிறதா?

தேவன் நம்மை நேசிக்கிறார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?

உன் அன்பை எப்படி காண்பிப்பாய்?

உன்னை தேவனுடைய பிள்ளையாக மாற்றுவது எது?

நீ நேசிக்கப்படுகிறாய் என்பதை எப்படி அறிந்து கொள்வாய்?

# கிருபை

## "பாப்கார்ன் ஜெபம்" குழு பிரித்தல்

உங்கள் வகுப்பில் பிள்ளைகள் அதிகமாக இருந்தால், அவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து, "அன்புள்ள பரம தகப்பனே, என்னை நேசித்து, உம் பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி" என்று சொல்லி, ஜெபத்தைத் தொடங்குங்கள். பிள்ளைகள் இந்த வரியை மீண்டும் சொல்லட்டும். பின்னர், ஒவ்வொருவராக அவர்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பதை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள் என்பதையும், தேவனுடைய நித்திய அன்பைப் பற்றி அவர்கள் புரிந்து கொண்டதையும் வைத்து, அவருடைய அன்புக்காக நன்றி செலுத்தி, ஒரு வரி ஜெபங்களைச் செய்யச் சொல்லுங்கள். அவர்கள் மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களை அல்லது அவரது குணாதிசயங்களை உரக்கச் சொல்லலாம். உங்கள் வகுப்பில் குறைந்த அளவிலான பிள்ளைகள் இருந்தால், அவர்கள் கைகோர்த்து, வட்டமாக அமர்ந்து, ஜெபிக்க ஏவப்படும் பிள்ளைகளை ஜெபிக்கச் சொல்லலாம்.

## பேசு!

- நாம் நேசிப்பதற்கு ஏற்ற விதத்தில் எதையும் செய்யாமல் இருக்கும்போதும் நேசிப்பதுதான் கிருபை எனப்படுகிறது.
- தேவன் நம்மை நேசிக்கிறார் என்று அறிவோம், ஏனென்றால் அவர், நம்மைப் படைத்து, போஷித்து வருகிறார்; நமக்காகச் சிலுவையில் மரிக்கும்படித் தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை அனுப்பினார்.
- நித்திய அன்பு என்றால் என்ன? என்றென்றும் முடிவடையாத அன்பு. பல கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆனாலும் அது முடியாது.
- நீங்கள் தவறு செய்தால் அது போய்விடாது.
- நீங்கள் பயந்தாலும் அது போகாது.
- நீங்கள் நேசிக்கும் ஒருவர் இறந்தாலும் அது ஒழியாது.
- உங்கள் பெற்றோர்கள் வேலை இழந்தாலும் அது முடிவுக்கு வராது.
- பள்ளியில் மோசமான மதிப்பெண்கள் பெற்றாலும் அது முடிவடையாது.
- என்ன நடந்தாலும், இயேசுவின் அன்பு ஒருபோதும் முடிவடையாது, ஒருபோதும் கைவிடாது.

தேவனுடைய அன்பைப் பற்றிப் பிள்ளைகள் தாங்கள் நினைப்பதை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்: தேவனுடைய அன்பைப் பற்றி அறிந்து கொள்ளும் பிள்ளைகள், தேவனுடைய அன்பு அல்லது சந்தோஷத்தைத் தாங்கள் இழந்து போவதைக் குறித்த பயங்களையும், கவலைகளையும் பகிர்ந்து கொள்ளட்டும்.

# கிருபை

## உங்களால் கேட்க முடிகிறதா?

**காணாமல் போன ஆடு உவமை (லூக்கா 15:1-7)**

தேவன் நம்மை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். அவர் ஒரு மேய்ப்பனையும், காணாமல் போன அவனுடைய ஆட்டையும் பற்றிய ஒரு கதையைச் சொன்னார். அந்த மேய்ப்பன் காணாமல் போன ஆட்டின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்ததால், மற்ற எல்லா ஆடுகளையும் விட்டுவிட்டு, காணாமல் போன அந்த ஒரு ஆட்டைத் தேடித் போனான். ஆடுகள் சில நேரங்களில் வழிதவறி, தங்கள் சொந்த வழியில் போய்விடும். அப்போது அவைகளைக் கரடிகள், ஓநாய்கள், அல்லது சிங்கங்கள் தாக்கி சாப்பிட்டுவிடக் கூடும். ஆடுகளை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பது ஒரு மேய்ப்பனின் வேலை, அதையேதான் இந்த மேய்ப்பனும் செய்தான். அதைக் கண்டுபிடித்தபோது அவன் மிகவும் மகிழ்ந்து, அதைத் தன் தோள்களில் சுமந்து வீட்டுக்குக் கொண்டு வந்தான். பின்னர், அவன் தன் நண்பர்களையும், அயலகத்தாரையும் அழைத்து, காணாமல் போன அந்த ஒரு ஆடு கிடைத்ததைக் கொண்டாடினான். ஒரு சிறுபையன், அல்லது சிறுபெண், ஒரு ஆண் அல்லது பெண் தம்மை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போதும் பரலோகத்தில் இதுதான் நடக்கிறது என்று இயேசு சொன்னார் – காணாமல் போன அவர்கள் கிடைத்துவிடுகிறார்கள், அது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும், கொண்டாட்டத்தையும் கொண்டு வருகிறது! நம் பரம பிதா தம் பிள்ளைகளுக்காக சந்தோஷப்படுவதை செப்பனியா 3:17 மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். “உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.” இதை அறியும் நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?



## உன்னால் செய்ய முடியுமா?

- இயேசு உன் பாவங்களுக்காக மரித்தார், அவர் உன் இருதயத்தில் வாழ்கிறார் என்பதை விசுவாசி.
- அவரது கிருபை உன்னை அவருடைய அன்பான பிள்ளையாக மாற்றியிருக்கிறது என்பதை விசுவாசி.
- என்ன நடந்தாலும், அவருடைய அன்பு முடிந்தே போகாது என்பதை விசுவாசி.
- இன்று தேவனுடைய கிருபையின் செய்தியை இன்னொருவருக்குப் பகிர்ந்து கொள்ள அவரால் உன்னைப் பயன்படுத்த முடியும் என்பதை விசுவாசி.

# கிருபை

## விளையாடு!

### மேய்ப்பனும், மந்தையும்

1. முக்கியக் குறிப்பு: இந்த விளையாட்டு, "இறைச்சியைத் திருடு" விளையாட்டில், "ஆடுகள்", "ஓநாய்கள்" மற்றும் "மேய்ப்பன்" எனச் சிறு மாற்றங்கள் செய்து, நான்கு பக்கங்களை மட்டும் வைத்து விளையாடப்படுகிறது.
2. ஒரு பெரிய சதுர இடத்தைக் குறித்து, அதற்குள்தான் விளையாட வேண்டுமென்று சொல்லிவிடுங்கள். நடுவில், "காணாமல் போன ஆடு" நிற்பதற்கு ஒரு சிறு சதுரம் வரையுங்கள். காணாமல் போன ஆட்டைக் காவல் காக்க ஆறு ஓநாய்கள் இருக்க வேண்டும். பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் பிரித்து, பெரிய சதுரத்தின் நான்கு பக்கங்களிலும் நிற்க வையுங்கள்.
3. பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் (10 பேருக்குக் குறைவாக இருந்தால் இரண்டு குழுக்களாக) பிரித்ததும், ஒரே பக்கத்தில் விளையாடும் ஒவ்வொருவருக்கும் ஒரு எண் கொடுத்துவிடுங்கள். ஒவ்வொரு குழுவிலும், ஒன்று, இரண்டு, மூன்று, ... என்று எண்கள் இருக்கும்.
4. பயிற்சியாளர் "எண் ஒன்று" என்று கத்தும்போது, ஒவ்வொரு குழுவிலும் எண் ஒன்றைக் கொண்டவர்கள் ஓடிப் போய், நடுவிலிருக்கும் காணாமல் போன ஆட்டை மீட்க முயற்சி செய்ய வேண்டும். யாராவது ஓநாயிடம் பிடிபட்டால், அடுத்த சுற்று வரை விளையாட முடியாது.
5. முக்கியக் குறிப்பு: "மீட்கும் ஆடுகளை" விட அதிகமான ஓநாய்களை வையுங்கள்.
6. அதிகமான ஓநாய்கள் இருப்பதால், மற்ற ஆடுகளால் காணாமல் போன ஆட்டை மீட்க முடியாது.
7. முக்கியக் குறிப்பு: மீண்டும் இப்படியே விளையாடுங்கள்; இந்த முறை, பயிற்சியாளர்களில் ஒருவர் "நல்ல மேய்ப்பனாக" இருந்து, எந்த நேரத்திலும் "ஓநாய்களே, ஓடிவிடுங்கள்! ஆடுகளே வீடு திரும்புங்கள்!" எனக் கத்துவார் என்று சொல்லிக் கொடுங்கள். அப்போது, ஓநாய்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும், ஆடுகள் தங்கள் பக்கத்திற்குச் சென்று, மீண்டும் விளையாடத் தொடங்கலாம்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: நல்ல மேய்ப்பன் எப்போதும் ஆடுகள் தம் வீட்டில் பாதுகாப்பாக இருக்கின்றனவா என்றுப் பார்த்துக் கொள்வார்.

## கேள்விகள்

1. முதல் சுற்றில், யாராவது ஒருவரால் ஆட்டை ஓநாயிடமிருந்து காப்பாற்ற முடிந்ததா? (இல்லை) ஏன் முடியவில்லை?
2. வேதத்தில், நல்ல மேய்ப்பன் எத்தனை ஆடுகளைக் காப்பாற்றும்படித் தேடிச் சென்றான்? ஒரே ஒரு ஆடு! பிள்ளைகளே, காணாமல் போனது நீங்கள் ஒரே ஒருவராக மட்டும் இருந்தாலும், நல்ல மேய்ப்பராகிய இயேசு உங்களைத் தேடி வருவார் என்று அறிவீர்களா? இயேசு எந்த நேரமும் உன்னைத் தேடுகிறார் என்பதை அறியும்போது, எப்படி இருக்கிறது?
3. *ஜெபிப்போம். நான் சொல்வதைச் சொல்லுங்கள். தேவனே, நாங்கள் நன்றாக விளையாடினோம், அதற்காக உமக்கு நன்றி. கிருபை என்பது நான் சம்பாதிக்காமல் அல்லது ஒரு வேலையும் செய்யாமல் ஒன்றைப் பெற்றுக் கொள்வது, அது ஒரு பரிசு என்பதைப் புரிந்து கொள்ள எனக்கு உதவும். நாம் சற்று நிறுத்தி, தேவன் நம்மிடம் பேசுவதைக் கேட்போம். நான் எப்போதாவது கிருபை என்னும் இந்தப் பரிசைக் கேட்டிருக்கிறேனா? (** சற்று நிறுத்தவும்) தேவனே, நீர் என்னையும் உம்முடைய பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி. நான் தேவனுடைய பிள்ளை!

*[தலைவரே, இந்த ஜெபங்கள் "சொல்லிக் கொடுத்துச் சொல்லும் ஜெபங்கள்." பிள்ளைகளே, நான் சொல்வதைச் சொல்லுங்கள்...]
**[தலைவரே, ஒவ்வொரு பிள்ளையுடைய இருதயத்திலும் தேவன் பேசும்படி 10 வினாடிகள் அவகாசம் கொடுங்கள். பிள்ளைகளுக்கு ஜெபத்தில் பேசவும், கவனிக்கவும் கற்றுக் கொடுக்கிறோம்.]



©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# கிருபை

## பயிற்சித்தாள

1. கிருபையைப் பற்றிய ஜெபத்தின் முதல் வரியை நினைவுபடுத்தி, கீழே எழுத முடியுமா?

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   யோவான் 3:1, ‘நாம் தேவனுடைய __________ அழைக்கப்படுவதினாலே ___________ நமக்குப் ___________ எவ்வளவு ___________ பாருங்கள்.”

3. உங்களை என்றென்றைக்கும் தேவனுடைய பிள்ளையாக இருக்கச் செய்வது எது என்று உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுத முடியுமா?

4. இயேசுவுக்கு உங்கள் பெயர் முதற்கொண்டு, உங்களைப் பற்றிய எல்லாம் தெரியும்! இதை அறிவதால் எப்படி உணருகிறீர்கள் என்பதை ஒரு வாக்கியத்தில் அல்லது ஒரு படம் வரைந்து விவரிக்க முடியுமா?

5. பதில் நேரம்:

   நன்றியுள்ளவர்களாக இருப்பது நல்லது. அது இயேசுவுக்குப் பிரியமானது. இயேசுவுக்கு நீங்கள் ஒரு “நன்றி” குறிப்பு எழுத முடியுமா?

# கிருபை

## ராப் பாடல்!




**நான் ராஜாதி ராஜாவின் பிரியமான பிள்ளை!**

**நான்தான், நான்தான்!**

**நான் நித்தியமாக அவரின் அரும் பொக்கிஷம்!**

**நான்தான், நான்தான்!**

**அவர் கிருபையால் இரட்சிக்கப்பட்டேன், அவர் இரத்தத்தால் மீட்கப்பட்டேன்!**

**நான்தான், நான்தான்!**

**நான் அவர் செட்டைக்குள், தீங்கு என்னை அணுகாது!**

**நான்தான், நான்தான்!**

**என் மீது அவர் அன்பு என்றென்றும் மாறாது, நன்றி!**

**நான்தான், நான்தான்!**

**நான் உன்னதமான தேவனின் பிள்ளை!**

**ஆமென்!**

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# அன்பு

உம்மை நேசித்து, உமக்குக்
கீழ்ப்படிய உதவும்.



ஆபிரகாம் கதை • ஆதியாகமம் 12:1-5



மத்தேயு 22:37,38

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை.



# அன்பு

## உன்னால் சொல்ல முடியுமா?

*உம்மை நேசித்து, உமக்குக் கீழ்ப்படிய உதவும்.*

மத்தேயு 22:37, 38
உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*உபாகமம் 7:9*
*யோவான் 14:15*
*2 யோவான் 1:6*
*கொலோசெயர் 3:20*

## உங்களால் உணர முடிகிறதா?

கீழ்ப்படிதல் என்றால் என்ன?

கீழ்ப்படிதலை விட அன்பு அதிக முக்கியமானதா?

அன்பு ஏன் கீழ்ப்படிதலுடன் தொடர்புடையதாக இருக்கிறது?

# அன்பு

## “பாப்கார்ன் ஜெபம்” குழு பிரித்தல்

“உம்மை நேசித்து, உமக்குக் கீழ்ப்படிய உதவும்” என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- நாம் நம் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.
- நாம் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். இது அவரை மகிழ்விக்கும்.
- எல்லாவற்றிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நாம் அவரை நேசிப்பதை வெளிப்படுத்துகிறோம்.
- கதையில், கீழ்ப்படிதலைத் தொடர்ந்து ஆசீர்வாதம் வருவதைக் காண்பீர்கள்.
- இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றுவது ஒரு பரவசமூட்டும் பயணம்.

இங்கு, கீழ்ப்படிதலைப் பற்றிய கலந்துரையாடலைத் தொடங்கலாம். நம் பெற்றோருக்கு எல்லாவற்றிலும் நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் சொல்லியிருப்பதால், பெற்றோருக்குக் கீழ்ப்படிவது தேவனுக்கே கீழ்ப்படிவதாகும். கீழ்ப்படிவதில் அவர்களுக்கு ஏற்படும் சவால்களையும், அதேசமயம் கீழ்ப்படிவதால் அவர்கள் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களையும் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள். இறுதியாக, அன்பும் கீழ்ப்படிதலும் எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்ள உதவுங்கள்.

# அன்பு

## உங்களால் கேட்க முடிகிறதா?

### ஆபிரகாம் கதை (ஆதியாகமம் 12:1-5)

ஆபிரகாம் மிக நீண்ட காலத்துக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் மிகவும் வயது முதிர்ந்தவரானபோது, தேவன் அவரிடம், "நீ உன் தேசத்தையும், உன் குடும்பத்தாரையும், உன் உறவினர்களையும் விட்டுப் புறப்பட்டு, நான் காண்பிக்கும் தேசத்திற்குப் போ. நான் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியை பெரிய தேசமாக மாற்றுவேன். நீ பிரபலமடைந்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பாய். உன்னால் பூமியிலிருக்கும் எல்லோரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்று சொன்னார். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். அவர் தன் மனைவியையும், தன் சகோதரனின் மகனாகிய லோத்துவையும் கூட்டிக் கொண்டு, தங்கள் உடைமைகளை எல்லாம் எடுத்துக் கொண்டுப் புறப்பட்டார். அவர்கள் ஆரான் என்னுமிடத்திலிருந்த தங்கள் வீட்டை விட்டு நீண்ட தூரம் பயணம் செய்து, வாக்குப்பண்ணப்பட்ட தேசம் என்று அவர்களால் அழைக்கப்பட்ட தேசத்திற்குச் சென்றார்கள். தேவன் செய்யச் சொன்னதை ஆபிரகாம் செய்தது ஏன் என்று தெரிகிறதா? ஆம், நீங்கள் சொல்வது சரிதான். அவர் நேசிக்கவும், கீழ்ப்படியவும் கற்றுக் கொண்டிருந்தார். அவர் அப்படிக் கீழ்ப்படிந்தது தன் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிதலிலும், அன்பிலும், விசுவாசத்திலும் வளருவதன் தொடக்கமாக இருந்தது.



## உன்னால் செய்ய முடியுமா?

- தேவன் கேட்பதைச் செய்து, உன்னுடைய அன்பையும், பக்தியையும் காண்பி.
- உன் பெற்றோருக்குக் கீழ்ப்படி, ஏனெனில் அது தேவனைக் கனம் பண்ணுவதாக இருக்கும்.
- உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் தேவனை நேசிக்க உன்னை அர்ப்பணி.

# அன்பு

## விளையாடு!

### திரும்பிப் பார்க்காதே

1. பிள்ளைகளை 10 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவினரும் கைகளைக் கோர்த்து, பெரிய வட்ட வடிவில் நிற்க வேண்டும். பின்னர், கையை விட்டு, ஒவ்வொருவரும் திரும்பி, தனக்கு வலப்பக்கத்தில் நிற்பவருடைய பின்புறத்தை நோக்கி, அவர்களின் “வாலைப்” பார்த்து நிற்க வேண்டும்.
2. (எளிதில் உருவக் கூடிய துணி நாடா, அல்லது கயிறால் செய்த) மூன்று வால்களை விளையாடுபவர்கள் எல்லோருக்கும் கொடுத்து, அவற்றைத் தங்கள் பேன்ட், பாவாடை அல்லது பெல்ட் கொக்கியில் சொருகிக் கொள்ளச் சொல்லுங்கள். (அப்படி வாலைச் சொருகிக் கொள்ள முடியாத பிள்ளைகளுக்கு, ஒரு நீளமான துணியை அவர்கள் வயிற்றைச் சுற்றி பெல்ட் போலக் கட்டி, வாலை அதில் சொருகி விடுங்கள்.) [முக்கியக் குறிப்பு: “வால்கள்” கிடைக்கவில்லை என்றால், முன்னால் நிற்பவருடன் சேர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.]
3. பிள்ளைகள் தங்களுக்கு முன்னால் இருக்கும் பிள்ளையின் வாலைப் பிடிக்க வேண்டும் என்பதே விளையாட்டின் நோக்கம். யாருடைய வால் பிடுங்கப்பட்டதோ, அவர் அந்தச் சுற்றிலிருந்து நீக்கப்படுவார்.
4. முக்கியக் குறிப்பு: போட்டியில் வெற்றி பெற வேண்டுமானால், பின்னால் திரும்பிப் பார்க்காமல், முன்னால் இருக்கும் இலக்கையே நோக்கிப் பார்க்க வேண்டும் என்று விளக்குங்கள்.
5. முக்கியக் குறிப்பு: (முன்னால் இருப்பவரின் வாலை எட்டிப் பிடிக்க முயற்சி செய்து கொண்டே) வட்ட வடிவில் சுற்றி ஓடுவது சிரமமாக இருந்தால் (கொஞ்சம் பேர் இருந்தால் இது சிரமமாக இருக்கும்), ஒரு பெரிய சதுர வடிவில் நின்று விளையாடுங்கள். “தொடங்கு” என்று சொன்னவுடனே, பிள்ளைகள் தங்கள் வாலைக் காப்பாற்றிக் கொண்டு, மற்றவர்களின் வாலைப் பிடிக்க முயற்சி செய்ய வேண்டும்.
6. பயிற்சியாளர் “நிறுத்து” என்று சொல்லும்போது, இன்னும் வால்(கள்) வைத்திருக்கும் பிள்ளைகள் வெற்றி பெற்றவர்கள்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: ஒரு புதிய வீட்டிற்குப் போகும்படி தேவன் ஆபிரகாமை அழைத்தார். அப்போது ஆபிரகாம் தன் வீடு, தன் பெற்றோர், தன் வேலை என தனக்குப் பரிச்சயமான எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் புறப்பட வேண்டியதாக இருந்தது. முன்னோக்கிப் பார்த்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்த ஆபிரகாமை தேவன் அதிகமாக ஆசீர்வதித்தார்.

## கேள்விகள்

1. விளையாட்டு நன்றாக இருந்தது! முன்னோக்கிப் பார்த்து ஓடுவது மிக முக்கியமானதாக இருந்தது – அந்த விளையாட்டில் யாராவது பின்னால் திரும்பி தன் வாலைப் பார்க்கும்போது என்ன நடந்தது? (அவனுடைய / அவளுடைய ஓட்டம் தடைப்பட்டு, தன் வாலை இழக்க நேர்ந்தது)
2. வேதாகமத்தில், ஆபிரகாம் முன்னோக்கிப் பார்த்து, தேவனைப் பின்பற்றும்படி, விட்டுச் சென்ற சில காரியங்கள் யாவை? (அவருடைய தேசம், வேலை, மற்றும் நண்பர்கள்)
3. இயேசுவே, இன்று என்னை இங்கு அழைத்து வந்ததற்கு நன்றி. நான் எப்படி உமக்குக் கீழ்ப்படிந்து, என் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் உம்மை நேசிக்க வேண்டும் என்று எனக்குக் காண்பியும். (சற்று நிறுத்தவும்) தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன், இயேசுவே, உமக்குக் கீழ்ப்படிய எனக்கு உதவும்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# அன்பு

## பயிற்சித்தாள

1. அன்பைப் பற்றிய ஜெபத்தின் இரண்டாம் வரியை நினைவுபடுத்தி, கீழே எழுத முடியுமா?

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   மத்தேயு 22:37, 38 "_______ கர்த்தரிடத்தில் உன் முழு _____, உன் முழு __________ உன் முழு ___________ ___________; இது __________ பிரதான ___________________"

3. கீழ்ப்படிதல் என்றால் என்ன?

4. கீழ்ப்படிவதைக் கடினமாக்குவது எது என்று நினைக்கிறாய்?

5. பதில் நேரம்:

   கோடிட்ட ஒரு தாளில், இன்றைய மனன வசனத்தை உன் அழகான கையெழுத்தில் எழுதவும். பின்னர் அதில் உனக்குப் பிடித்த வண்ணத்தாள் கொண்டு நான்கு பக்கமும் சட்டம் (frame) போல ஒட்டவும். தேவனுடைய பிரதான கற்பனையை நினைவூட்டும் விதத்தில் அதை உன் படுக்கையறைச் சுவர் அல்லது மேஜையில் வைத்துக் கொள்ளலாம்.

# அன்பு

## ராப் பாடல்!




தினமும் காலையில் என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

தேவனுடைய பரிசுத்த வார்த்தையை வாசிக்கும்போது என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

தவறு செய்ய நேர்ந்தால் என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

மோசமான நாளாக இருந்தால் என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

இரவில் பயந்தால் என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

தேவனுக்குப் பிரியமாக என்ன செய்வாய்?

நம்புவேன், கீழ்ப்படிவேன் & ஜெபிப்பேன்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# மனதுருக்கம்

நீர் என்னை நேசிப்பது போல
நான் பிறரை நேசிக்க உதவும்.



நல்ல சமாரியன் • லூக்கா 10:25-37



யோவான் 15:12

நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.



# மனதுருக்கம்

## உன்னால் சொல்ல முடியுமா?

*நீர் என்னை நேசிப்பது போல நான் பிறரை நேசிக்க உதவும்.*

யோவான் 15:12
நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மத்தேயு 5:44-48*

*1 கொரிந்தியர் 13:4-7*

*1 யோவான் 4:7-11*

*1 யோவான் 3:18*

நாம் யாரை நேசிக்க வேண்டுமென்று கற்பனை சொல்கிறது?

எப்படி நேசிக்க வேண்டும்?

உங்களால் உணர முடிகிறதா?



உன் குடும்பத்தினரின் அன்பை எப்போது மெய்யாக உணர்கிறாய்?

தேவன் உன்னை நேசிப்பதை எப்படி உணர்கிறாய்?

# மனதுருக்கம்

## "பாப்கார்ன் ஜெபம்" குழு பிரித்தல்

"நீர் என்னை நேசிப்பது போல நானும் பிறரை நேசிக்க உதவும்" என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- தேவனை உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் நேசிப்பதைப் போலவே பிறரை நேசிப்பதும் மிக முக்கியமானது.
- பிறரை நேசிப்பது என்பது உன் நண்பர்களையும், எதிரிகளையும் நேசிப்பதாகும். ஓ! அது கஷ்டமானது.
- பிறரை நேசிப்பது என்பது இயேசு நேசித்தது போலத் தியாகத்துடன் நேசிப்பதாகும். அதாவது, உன்னை விட மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது.

இயேசு சொன்னது போல பிறரை நேசிப்பதில் தங்களுக்கு இருக்கும் அக்கறையையும், சவால்களையும் பகிர்ந்து கொண்டு, அதைப் பற்றித் திறந்த மனதுடன் பேசுமாறு பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். மத்தேயு 5 –ஆம் அதிகாரத்தில் இதனுடன் தொடர்புடைய வேதப்பகுதியைப் பாருங்கள். பிள்ளைகள் தங்கள் உறவுகளில் ஏற்படும் போராட்டங்களையும், தங்களைப் பிடிக்காதவர்களை நேசிப்பது ஏன் கடினமாக இருக்கிறது என்பதையும் பகிர்ந்து கொள்ள விரும்பலாம். 1 கொரிந்தியர் 13 –ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அன்பின் பண்புகளைப் பற்றிப் பேசுங்கள். அவற்றில் பின்பற்றக் கடினமானவை எவை, சுலபமானவை எவை?

# மனதுருக்கம்



## உங்களால் கேட்க முடிகிறதா?

**நல்ல சமாரியன் (லூக்கா 10:25-37)**

தேவன் நம்மை நேசிப்பது போல நாம் பிறரை நேசிக்க வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன? அதைப் பற்றிப் பார்ப்போம். ஒருவன் இயேசுவிடம், "எனக்குப் பிறன் யார்?" என்று கேட்டான். இயேசு அதற்கு ஒரு கதைச் சொல்லி விளக்கினார். அவர் பெரும்பாலும் அப்படித்தான் செய்வார். இயேசு நன்றாகக் கதை சொல்பவராக இருந்தார். அவர் சொன்ன கதை: "எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போய்க் கொண்டிருந்த ஒருவனை மோசமான ஒரு கூட்டத்தினர் அடித்துத் தாக்கி, அவனுடைய பணத்தையும், வைத்திருந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, பாதி இறந்த நிலையில் சாலையோரத்தில் விட்டுச் சென்றார்கள். அவ்வழியே வந்த ஒரு ஆசாரியன் ஒதுங்கி, சாலையின் மறுபுறம் வழியாகச் சென்றுவிட்டான்." அவனிடம் மனதுருக்கமே இல்லை. தொடர்ந்து இயேசு, "மதத் தலைவனாக இருந்த ஒரு லேவியனும் அந்த வழியே வந்தபோது, வேறு பக்கம் போய்விட்டான்" என்றார். ஓ, உண்மையாகவா? அடுத்து என்ன நடந்தது தெரியுமா? "ஒரு சமாரியன் (மற்றவர்களால் தாழ்வாக எண்ணப்பட்டவன்) காயப்பட்ட அந்த மனிதனைப் பார்த்து, என்ன செய்தான் தெரியுமா? அவனுக்கு உதவி செய்து, தேவனுடைய அன்பை வெளிப்படுத்தினான். அவனுடைய காயங்களைச் சுத்தம் செய்து, கட்டுப் போட்டு, அவனுடைய கழுதையின் மேல் அவனை ஏற்றி, ஒரு சத்திரத்திற்கு (ஹோட்டல் போன்ற இடம்) கொண்டு போய், அவன் நலமடையும் வரை அவனைப் பார்த்துக் கொள்ளுமாறு சத்திரக் காப்பாளனிடம் சொன்னான். அதற்கு ஆகும் செலவுக்கு இந்த வெள்ளிக் காசுகளை வைத்துக் கொள், இன்னும் தேவைப்பட்டால் நான் திரும்பி வரும்போது கொடுக்கிறேன் என்று சொன்னான்." இயேசு இந்தக் கதையை எப்படி முடித்தார் தெரியுமா? "நீயும் போய் அப்படியே செய்" என்று சொல்லி முடித்தார்.

## உன்னால் செய்ய முடியுமா?

- இயேசுவைப் போல தியாகத்துடன் அன்பு செய்.
- பேச்சினால் மட்டுமல்ல, செய்கைகளாலும் அன்பு செய். நீ பிறர் மீது அக்கறை காண்பிக்கும்போது, மனதுருக்கத்தை வெளிப்படுத்துகிறாய்.
- கர்த்தராகிய இயேசுவை உன் முழு இருதயத்தோடும் அன்புகூர்ந்து, பரிசுத்த ஆவியானவர் உன் மூலமாகப் பிறரை நேசிக்கும்படி அவரிடம் கேட்டுக் கொள்.

# மனதுருக்கம்



## விளையாடு!

### முடிவடையாத கப்

1. பிள்ளைகளைக் குறைந்தது இரண்டு குழுக்களாகப் பிரிக்கவும் (அதிகமான பிள்ளைகள் இருந்தால் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளலாம்).
2. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் பக்கவாட்டில், ஒரு கை நீள இடைவெளி விட்டு நிற்கச் செய்யவும்.
3. வரிசையின் ஆரம்பத்தில் ஒரு பெரிய வாளியையும், முடிவில் மற்றொரு பெரிய வாளியையும் வைக்கவும்.
4. பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் ஒரு பேப்பர் கப் கொடுக்கவும்.
5. "போ" என்று சொன்னதும், முதலில் நிற்கும் பிள்ளை ஓடிச் சென்று, வரிசையின் தொடக்கத்தில் இருக்கும் வாளியிலிருந்து கப் வைத்து தண்ணீர் மொண்டு, மீண்டும் வரிசைக்கு ஓடி வந்து, பக்கத்தில் இருக்கும் பிள்ளையின் கப்பில் தண்ணீரை ஊற்ற வேண்டும் – தண்ணீரைத் தனக்கென வைத்துக் கொள்ளாமல், பக்கத்தில் இருக்கும் பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் – அடுத்தடுத்து நிற்பவர்கள் அதேபோல் செய்ய வேண்டும். கடைசியில் நிற்பவர் வரிசையின் முடிவில் இருக்கும் வாளியில் தண்ணீரை ஊற்றி விட்டு, "உதவி, எனக்கு இன்னும் தண்ணீர் வேண்டும்!" என்று கத்த வேண்டும்.
6. அந்தச் சத்தத்தைக் கேட்கும் முதல் பிள்ளை ஓடிச் சென்று, மீண்டும் தண்ணீர் மொண்டு, பக்கத்தில் இருக்கும் பிள்ளையுடன் பகிர்ந்து கொண்டு, மீண்டும் முன் செய்தது போலவே செய்ய வேண்டும்.
7. பயிற்சியாளருக்கான முக்கியக் குறிப்பு: முதல் சுற்றில், தொடக்க வாளியில் மிகக் குறைந்த அளவுத் தண்ணீர் மட்டும் வைத்திருக்கவும்; அடுத்தடுத்த சுற்றுகளில் வாளியில் தண்ணீரை அதிகமாகச் சேர்த்துக் கொண்டிருங்கள், அப்போது பிள்ளைகள் அதிகமான தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளலாம்.
8. வேடிக்கைக் குறிப்பு: முடிவில் இருக்கும் வாளியின் பாதி அளவைக் குறித்து, ஐந்து நிமிடங்களுக்குள் அந்த அளவுக்கு மேல் தண்ணீர் நிரப்ப வேண்டும் என்று பிள்ளைகளிடம் சொல்லவும்!

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: நாம் தேவனிடமிருந்து பெற்றதை பிறருக்குக் கொடுத்து விடுகிறோம்.

## கேள்விகள்

1. பிள்ளைகளே, ஏன் தண்ணீரை உங்கள் பக்கத்தில் இருப்பவருக்கு கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள்? ஏன் அதை நீங்களே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது? (நான் எந்த அளவுக்குத் தண்ணீர் கொடுத்தேனோ அந்த அளவுக்கு எனக்குத் தண்ணீர் கிடைத்தது)
2. வேதாகமத்தில், காயப்பட்ட ஒருவனுக்கு உதவித் தேவைப்பட்டது; நல்ல சமாரியன் ஏன் காயப்பட்டவனுக்குத் தயவு செய்து, உதவினான்? (அவனுக்குத் தேவை இருந்தது, சமாரியன் அந்தத் தேவையைச் சந்திக்க முடிந்தது)
3. தேவனே, என்னைச் சுற்றிலும் தேவையுடன் இருப்பவர்களையும், மனதுருக்கம் தேவைப்படுபவர்களையும் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும். இயேசுவே, என் வாழ்வில் இப்போதே யாருக்கு உதவித் தேவை என்று தயவு செய்து காண்பியும். (சற்று நிறுத்தவும்) இயேசுவே, பிறரை நேசித்து, உதவுபவனாக/ உதவுபவளாக என்னை மாற்றும்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# மனதுருக்கம்

## பயிற்சித்தாள

1. மனதுருக்கத்தைப் பற்றிய ஜெபத்தின் மூன்றாவது வரியை நினைவுபடுத்தி, எழுத முடியுமா?

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   யோவான் 15:12 நான் உங்களில் ____________________ நீங்களும் ____________________ வேண்டுமென்பதே என்னுடைய ____________________

3. இயேசுவின் சிலுவை மரணம் உன் மீதான அவரின் பூரணமான அன்பிற்கு உதாரணமாக இருப்பது ஏன்?

4. உனக்குத் தெரிந்த ஒருவர் மீது தியாகத்துடன் அன்பு காட்டக்கூடிய ஒரு வழியைக் குறிப்பிடு.

5. பதில் நேரம்:

   உருவாக்கும் தாள், க்ரேயான் மற்றும் மார்க்கர் உதவியுடன் நீ அன்புகாட்ட விரும்பும் ஒருவருக்கு வாழ்த்து அட்டைத் தயாரிக்கவும். வேண்டுமானால், அந்த அட்டையின் ஒரு பகுதியில் இன்றைய மனன வசனத்தை எழுதலாம்!

# மனதுருக்கம்

## ராப் பாடல்!




தேவனே, நான் உம்மை முழு இருதயத்துடன் நேசிக்கிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

தேவனே, நான் உம்மை முழு ஆத்துமாவுடன் நேசிக்கிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

தேவனே, நான் உம்மை முழு மனதுடன் நேசிக்கிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

தேவனே, நான் உம்மை முழு பலத்துடன் நேசிக்கிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

உம் அன்பை நான் காணவும், உணரவும் விரும்புகிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

உம் அன்பு மெய்யானது என பிறருக்குக் காண்பிக்க விரும்புகிறேன்!

நேசிக்கிறேன், நேசிக்கிறேன்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# மனந்திரும்புதல்

என் பாவங்களுக்காக
வருந்துகிறேன். என்னைச்
சுத்திகரியும்.



மன்னிக்காத வேலைக்காரன் உவமை • மத்தேயு 18:21-35



சங்கீதம் 51:2

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.



# மனந்திரும்புதல்

## உன்னால் சொல்ல முடியுமா?

*என் பாவங்களுக்காக வருந்துகிறேன். என்னைச் சுத்திகரியும்.*

சங்கீதம் 51:2
என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மத்தேயு 6:9-15*

*அப்போஸ்தலர் நடபடிகள் 3:19*

## உங்களால் உணர முடிகிறதா?

ஏதாவது தவறு செய்த பின் எப்படி உணருகிறாய்?

பாவ மன்னிப்பைப் பெற்ற பின் எப்படி உணருகிறாய்?

“நான் அதற்காக வருந்துகிறேன்” என்று நீ சொல்வதைத் தடுப்பது எது?

# மனந்திரும்புதல்

## "பாப்கார்ன் ஜெபம்" குழு பிரித்தல்

"என் பாவங்களுக்காக வருந்துகிறேன். என்னைச் சுத்திகரியும்" என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- பாவ மன்னிப்பைப் பற்றிப் புரிந்து கொள்வதில் எது கடினமானதாக இருக்கிறது?
- உன்னை வேதனைப்படுத்தியவர்களை மன்னிப்பது ஏன் கடினமானதாக இருக்க வேண்டும்?
- "நான் அதற்காக வருந்துகிறேன், தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்" என்று சொல்வது ஏன் கடினமாக இருக்கிறது?
- தேவனுக்கும், உன் பெற்றோருக்கும், உன் சகோதர சகோதரிகளுக்கும், உன் நண்பர்களுக்கும் முன்பாக சுத்த மனசாட்சியுடன் நிற்பது எப்படி இருக்கிறது?

தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்க விரும்புகிறார் என்பதைப் பற்றி பேசி, கலந்துரையாடலைத் தொடங்குங்கள். அவரே நம் முன்மாதிரி, அவர் நம்மை மன்னிப்பதால், நாமும் மற்றவர்களை மன்னிப்பது அவசியம். நீங்கள் சேர்ந்து கர்த்தருடைய ஜெபத்தை வாசிக்கலாம். பிள்ளைகளுக்கு மன்னிக்கக் கடினமாக இருக்கும் நேரங்களைத் திறந்த மனதுடன் பகிர்ந்து கொள்ளவும், அதைத் தாங்கள் மன்னிக்கப்படும்போது உணரும் விதத்துடன் ஒப்பிடவும் உற்சாகப்படுத்துங்கள்.

# மனந்திரும்புதல்

## உங்களால் கேட்க முடிகிறதா?

**மன்னிக்காத வேலைக்காரன் உவமை (மத்தேயு 18:21-35)**

பேதுரு இயேசுவிடம், "நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை எத்தனை முறை மன்னிக்க வேண்டும், ஏழு முறையா?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "ஏழு எழுபது முறை" என்று சொல்லி, மற்றொரு கதையைச் சொல்லத் தொடங்கினார். முன்னொரு காலத்தில் இருந்த ஒரு ராஜா தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, ஒவ்வொருவரும் தன்னிடம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டான்.



அவர்களில் ஒரு வேலைக்காரன் தன்னால் கொடுத்துத் தீர்க்கவே முடியாத அளவிற்கு அதிகமாகக் கடன் பட்டிருந்தான். அந்த ராஜா, "நீ எனக்குக் கொடுக்க வேண்டிய பணத்திற்கு பதிலாக உன்னையும், உன் குடும்பத்தையும் அடிமைகளாக விற்கப் போகிறேன்" என்று சொன்னான். அந்த மனிதனோ, "ஐயோ, வேண்டாம், தயவு செய்து அப்படிச் செய்ய வேண்டாம், ராஜாவே, கெஞ்சிக் கேட்கிறேன். என் குடும்பத்திற்கும், எனக்கும் இரக்கம் காட்டுங்கள்" என்று கதறினான். இளகிய மனம் கொண்ட அந்த ராஜாவும் மனதுருக்கத்துடன் அவனிடம், "சரி, உன்னை விடுதலை செய்து விடுகிறேன், உன் கடனெல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டது!" என்று சொன்னான். ஆனால், அந்த வேலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? அவன் தன்னிடம் கொஞ்சம் பணம் கடன்பட்டிருந்த ஒரு வேலைக்காரனிடம் சென்று, நீ என்னிடம் வாங்கிய கடனை ஒரு பைசா மீதி இல்லாமல் கொடுக்கவில்லை என்றால், உன்னைச் சிறையில் அடைத்துவிடுவேன்" என்று மிரட்டினான். அந்த வேலைக்காரன், "சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள். இரக்கம் காட்டுங்கள்" என்று கெஞ்சினான். ஆனால், கொடூர மனம் கொண்ட அந்த மனிதன் அவனுக்கு இரக்கம் காட்டவேயில்லை. மாறாக, அவனைச் சிறையில் அடைத்தான். சில நாட்களுக்குள், தன்னால் மன்னிக்கப்பட்ட வேலைக்காரன் செய்தது ராஜாவுக்குத் தெரிய வந்தது. அவன் மிகுந்த கோபமடைந்து, "பொல்லாத வேலைக்காரனே! நீ கெஞ்சிக் கேட்டதால் நீ என்னிடம் வாங்கியிருந்த பெரிய தொகையை மன்னித்துவிட்டேன். அதே இரக்கத்தை நீ ஏன் உன் வேலைக்காரனுக்குக் காண்பிக்கவில்லை?" என்று கேட்டான். பின்னர் என்ன செய்தான் தெரியுமா? அவனைச் சிறையில் அடைத்து, அவன் பட்டக் கடனைக் கொடுத்துத் தீர்க்கும் வரைத் தண்டித்தான்.

## உன்னால் செய்ய முடியுமா?

- நீ செய்யும் பாவங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் மனந்திரும்பி, தேவன் உன்னைப் பனியைப் போல வெண்மையாகக் கழுவிச் சுத்திகரிக்கும்படி வேண்டிக்கொள்.
- தேவன் உன்னுடைய எல்லாப் பாவங்களையும் கழுவிச் சுத்திகரிக்கிறார் என்பதை விசுவாசி.
- பாவம் செய்யாமலிருக்க உதவும்படி தேவனிடம் கேள்.
- மன்னித்து, தயவு செய்கிறவனாய் / செய்கிறவளாய் இருக்க உதவும்படி தேவனிடம் கேள்.
- எப்போதும் பிறரை மன்னிக்கத் தயாராக இரு, அவர்களுக்கு விரோதமாக மனதில் பகை வைத்துக் கொள்ளாதே.

# மனந்திரும்புதல்

## விளையாடு!

### சிவப்பு விளக்கு - பச்சை விளக்கு

1. போட்டிக்கான தொடக்க மற்றும் முடிவுக் கோடுகளை பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்.
2. தொடக்கக் கோட்டிற்குப் பின்னர் பிள்ளைகளை வரிசையாக நிற்கச் சொல்லவும்.
3. போட்டியின் தலைவர் “பச்சை விளக்கு” என்று கத்தும்போது, பிள்ளைகள் முடிவுக் கோட்டை நோக்கி ஓட வேண்டும். தலைவர் “சிவப்பு விளக்கு” என்று கத்தும்போது, ஓடுபவர்கள் உடனே நின்று விட வேண்டும். “சிவப்பு விளக்கில்” நிற்காதவர்கள் தொடக்கக் கோட்டிற்குத் திரும்பி, மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று விளக்குங்கள்.
4. பயிற்சியாளர் முடிவுக் கோட்டில், விளையாடும் பிள்ளைகளுக்கு முதுகு காண்பித்து நிற்க வேண்டும். அங்கிருந்து, “பச்சை விளக்கு”, “சிவப்பு விளக்கு” என்று மாறி மாறி கத்திக் கொண்டிருக்க வேண்டும். அவர் நிற்குமிடத்தை முதலில் சென்றடையும் பிள்ளை வெற்றி பெறும்.
5. பயிற்சியாளர் “சிவப்பு விளக்கு” என்று கத்தும்போது, திரும்பி, எல்லோரும் நிற்கிறார்களா என்று பார்க்க வேண்டும். “சிவப்பு விளக்கு” என்று அவர் கத்திய பின்னரும் ஓடிக் கொண்டிருப்பவர்கள் விதிமுறையை மீறிவிட்டதாக அர்த்தம். அவர்கள் 1. அதோடு நிறுத்தி, 2. தொடக்கக் கோட்டிற்குச் சென்று, 3. மீண்டும் தொடங்க வேண்டும்.
6. இப்படிப் பல சுற்றுகள் விளையாடவும்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: இது மனந்திரும்புதலைத் தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறது: ஒருவர் விதிமுறைகளை மீறும்போது, 1. நிறுத்தி, 2. திரும்பி, 3. தொடக்கக் கோட்டிற்குச் சென்று, 4. மீண்டும் தொடங்க வேண்டும்.

## கேள்விகள்

1. இந்த விளையாட்டில், தலைவர் “சிவப்பு விளக்கு” என்று கத்தும்போது, நீ ஓடிக் கொண்டிருந்தால், அல்லது கீழே விழுந்துவிட்டால், என்ன செய்ய வேண்டும்? (நின்று, திரும்பி, தொடக்கக் கோட்டிற்குச் சென்று, மீண்டும் ஓட்டத்தைத் தொடங்க வேண்டும்).
2. வேதாகமத்தில், அந்த மனிதன் ராஜாவிடமிருந்து இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக் கொண்டானா? (ஆம்). பின்னர் அந்த மனிதன் தன்னிடம் கடன் பட்டிருந்தவனுக்கு இரக்கத்தையும், மன்னிப்பையும் கொடுத்தானா? (இல்லை). மன்னிக்காத வேலைக்காரனை ராஜாவுக்குப் பிடித்ததா, பிடிக்கவில்லையா? (பிடிக்கவில்லை!)
3. இயேசுவே, நீர் எனக்குப் பாவமன்னிப்பைக் கொடுக்கிறீர். இயேசுவே, நீர் எனக்கு கிருபையைக் கொடுக்கிறீர். நான் செய்யக் கூடாதவைகளைச் செய்யும்போது, தயவு செய்து நான் மனந்திரும்ப எனக்கு நினைவுறுத்தும். நான் நின்று, தொடக்க நிலைக்குத் திரும்பி, மீண்டும் தொடங்க உதவிச் செய்யும். நான் மனந்திரும்ப வேண்டிய பகுதிகளை எனக்குக் காண்பியும். (சற்று நிறுத்தவும்) கர்த்தராகிய இயேசுவே, என் பாவங்களை மன்னித்து, என்னைக் கழுவிச் சுத்திகரித்த உம் கிருபைக்காக நன்றி. நானும் பிறரை மன்னிக்க உதவும்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# மனந்திரும்புதல்

## பயிற்சித்தாள

❶ மனந்திரும்புதல் பற்றிய ஜெபத்தின் நான்காம் வரியை நினைவுபடுத்தி, கீழே எழுத முடியுமா?

❷ கோடிட்ட இடத்தை நிரப்புக.

சங்கீதம் 51:2 என் ______________ என்னை .______________, என் ______________ என்னைச் சுத்திகரியும்.

❸ நாம் ஏன் தினமும் நம் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட வேண்டும்?

❹ நாம் பிறரை மன்னிப்பது ஏன் முக்கியமானதாகிறது?

❺ பதில் நேரம்:

பாவமன்னிப்பு இணைப்புகள்: காகிதத்தை நீளமான பட்டைகளாக வெட்டிக் கொள்ளவும். ஒரு பட்டையின் ஒரு பக்கத்தில், “நான் ______________ போது, தேவன் என்னை மன்னிக்கிறார்” என்று எழுதவும். மறுபக்கத்தில், “பிறர் ____________________ போது, நான் அவர்களை மன்னிக்கிறேன்” என்று எழுதவும். காகிதப் பட்டைகளை ஒன்றுக்குள் ஒன்று ஸ்டேப்ளர் அல்லது டேப் கொண்டு இணைக்கவும். தேவனுடைய முடிவே இல்லாத பாவமன்னிப்புக்கு நன்றி செலுத்த நினைவுபடுத்தும் விதத்தில் உங்கள் அறையில் இதைத் தொங்க விட்டுக் கொள்ளலாம்.

# மனந்திரும்புதல்

## ராப் பாடல்!




கீழ்ப்படியாதபோது என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

தவறானதைச் சொல்லிவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

பொய் சொன்னால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

சண்டைப் போட்டால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

மன்னிக்காமல் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

அன்பின்றி இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

நினைக்கும் வழியில் நடந்தால் என்ன செய்ய வேண்டும்?

மனந்திரும்புங்கள், ஜெபியுங்கள், & பாவத்திலிருந்து திரும்பு!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# ஆராதனை

உம்மை என் முழு
இருதயத்தோடும்
துதிப்பேன்!



கிறிஸ்மஸ் கதை • லூக்கா 2:1-20



சங்கீதம் 9:1

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.



# ஆராதனை

## உன்னால் சொல்ல முடியுமா?

*உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்!*

சங்கீதம் 9:1
கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*சங்கீதம் 145*

*மத்தேயு 21:16-17*

*1 தெசலோனிக்கேயர் 5:18*

*வெளிப்படுத்தின விசேஷம் 4:8-11*

## உங்களால் உணர முடிகிறதா?

துதி என்றால் என்ன?

நான் எப்படித் துதிக்க முடியும்?

எப்போது துதிக்க வேண்டும்?

# ஆராதனை

## "பாப்கார்ன் ஜெபம்" குழு பிரித்தல்

"கர்த்தாவே, உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்" என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- சில சமயங்களில், மற்ற எல்லாவற்றையும் விட துதிப்பது சுலபமானதாக இருக்கிறது.
- தேவனைத் துதிப்பது எப்போது சுலபமானதாக இருக்கிறது என்று சொல்.
- தேவனைத் துதிப்பது எப்போது அதிகக் கடினமானதாக இருக்கிறது என்று சொல்.
- நன்றியுள்ள இருதயம் தேவனுக்குப் பிரியமானது மட்டுமல்ல, அது அவரைத் துதிப்பதன் ஒரு பகுதியாகவும் இருக்கிறது. காலை எழுந்ததும் அவரைத் துதி! சாப்பிடும்போது அவரைத் துதி! பள்ளிக்குச் செல்லும்போதும், வீடு திரும்பும்போதும் அவரைத் துதி! தூங்கச் செல்வதற்கு முன் அவரைத் துதி!
- துதிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது உன் பரம தகப்பனுக்குப் பிரியமானது மட்டுமல்ல, உனக்கும் அது மகிழ்ச்சியாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும்!

சிறு பிள்ளைகளுக்கு ஆராதிக்கத் தெரியும்! இயேசுவுக்கு அவர்கள் தம் அன்பைக் காண்பிக்காமல் விடுவதில்லை, அது மற்றவர்களையும் பற்றிப் பிடிப்பதாக இருக்கிறது. அவர்களுக்கு மிகவும் பிடித்த ஆராதனை முறை எதுவென்று சொல்லச் சொல்லுங்கள். நன்றியறிதல் பற்றி நிச்சயமாக அவர்களுடன் பேசுங்கள். எல்லாவற்றிற்காகவும் எந்நேரமும் நன்றியுடன் இருப்பது கடினம். இப்போதே துதியையும், நன்றியறிதலையும் பழக்கப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விடச் சொல்லுங்கள்.

# ஆராதனை

## உங்களால் கேட்க முடிகிறதா?

கிறிஸ்மஸ் கதை – லூக்கா 2:1-20

நீண்ட காலத்திற்கு முன்னர், அதாவது இரண்டாயிரம் ஆண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்கு முன்னர், மாரியாள் என்னும் இளம்பெண்ணை காபிரியேல் என்னும் தேவதூதன் சந்தித்தான். அவன் மாரியாளுக்கு ஒரு விசேஷித்த செய்தியைக் கொண்டு வந்திருந்தான்: “மாரியாளே, பயப்படாதே. நீ தேவனிடம் கிருபை பெற்றாய். நீ கர்ப்பம் தரித்து, ஒரு மகனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராக இருப்பார், உன்னதமான தேவனுடைய குமாரன் எனப்படுவார்.” இயேசு பிறந்த பின்னர், அங்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. “திடீரென்று பரலோகத்திலிருந்து மற்ற அநேக தேவதூதர்கள் தோன்றி, சேர்ந்து தேவனைத் துதித்தார்கள். அவர்கள் சொன்னது: ‘உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும், மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாக.” புதிதாகப் பிறந்திருந்த குழந்தையாகிய ராஜாவைக் கண்டு ஆராதிக்க மேய்ப்பர்கள் விரைந்து வந்தார்கள். அவர்கள் பார்த்த, கேட்ட காரியங்களுக்காக தேவனைத் துதித்து, மகிமைப்படுத்தினார்கள். கிழக்கிலிருந்து சில ஞானிகள் குழந்தை இயேசுவைத் தேடி வந்தார்கள். இரவு வானத்தில் அழகாகப் பிரகாசித்த பளிச்சென்ற ஒரு நட்சத்திரம், அவர்கள் வந்து ராஜாவை ஆராதிக்க அவர்களுக்கு வழிகாட்டியது. மாரியாளும், யோசேப்பும், மேய்ப்பர்களும், ஞானிகளும் இயேசுவைக் கனம் பண்ணி, ஆராதித்தது போல, நாமும் அவரைக் கனப்படுத்தி, ஆராதிக்க வேண்டும். ஒருநாள், நாம் பரலோகத்தில் இருக்கும்போது, அவருடைய சிங்காசனத்தைச் சூழ நின்று, நாம் அவரை என்றென்றைக்கும் துதித்து, ஆராதித்துக் கொண்டிருப்போம்.



## உன்னால் செய்ய முடியுமா?

- தினமும், நாள் முழுவதும் தேவனைத் துதி.
- எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனைத் துதி. இது ஒரு விருப்பத் தெரிவு.
- தேவனிடமும், உன் குடும்பம், உன் நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் என தேவன் உன்னைச் சுற்றி வைத்திருப்பவர்களிடமும் நன்றியுள்ள இருதயத்துடன் இரு.
- துதி செய்வதைப் பழக்கப்படுத்திக் கொள்.

# ஆராதனை

## விளையாடு!

### எனக்குப் பிடித்த பாடல்

1. "தேவனுக்கு முன் உன்னைத் தாழ்த்து" என்னும் பாடலை நடித்துக் காண்பியுங்கள்.
2. www.youtube.com/watch?v=qpyDJMCL9yc
3. (உன்னைத் தாழ்த்து - கைகளை மேலே உயர்த்தி, முகத்தைத் தாழ்த்துங்கள். அவர் உன்னை உயர்த்துவார் - முழங்காற்படியிட்டு, பின்னர் ஒரு முழங்காலை உயர்த்தி எழுந்து, கைகளை முழுவதுமாக மேல்நோக்கி உயர்த்தி, கர்த்தரை ஆராதியுங்கள்)
4. பிள்ளைகளை இரு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பாடலைக் கேட்கக் கொடுத்து, அவர்களாகவே கைகளில் சைகை செய்து, நடித்துக் காண்பிக்கச் சொல்லுங்கள் (இதற்காக உங்களுக்குப் பிடித்த இரண்டு பாடல்களை முன்னமே தயார் செய்து வையுங்கள்).
5. ஒவ்வொரு குழுவும் தங்கள் கைச் சைகைகளைத் தங்களுக்குள் சொல்லிக் கொடுத்து பயிற்சி செய்து, பின்னர் அடுத்த குழுவுக்கு "நடித்துக்" காண்பிக்கட்டும். அதேபோல், அடுத்த குழுவும் பயிற்சி செய்து, பாடலை "நடித்துக்" காண்பிக்கட்டும்.
6. கடைசியில், நடித்துக் காண்பித்த மூன்று பாடல்களில் தங்களுக்குப் பிடித்தமான பாடலுக்கு ஒவ்வொருவரும் வாக்களிக்கச் செய்யுங்கள். வாக்களித்த பின்னர், "ஏன் இந்தப் பாடல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது?" என்று கேளுங்கள்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: பிள்ளைகள் தங்களுக்குப் புரியும் விதத்தில் ஆராதிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். அதிலும் முக்கியமாக, "எனக்குப் பிடித்த பாடல் எது, ஏன்?" என்று யோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உங்களுக்குப் பிடித்த ஆராதனைப் பாடலை அவர்களுடன் பகிர்ந்து கொண்டு, அது ஏன் உங்களுக்குப் பிடிக்கிறது என்று விளக்குங்கள்.

## கேள்விகள்

1. உனக்குப் பிடித்த பாடலாக நீ சொன்னப் பாடலைத் தெரிந்து கொள்ளக் காரணம் என்ன? (முக்கியக் குறிப்பு: "ஏன்" என்றக் கேள்வியைக் கேட்க நேரமெடுங்கள்; இந்த அனுபவத்தினால் அவர்கள் ஆராதனையின் முக்கியத்துவத்தையும், தங்களுக்கு ஏன் ஆராதிப்பது பிடித்திருக்கிறது, எந்தப் பாடல் தங்களுக்குப் பிடிக்கும் என்றெல்லாம் யோசிக்கவும் வைக்கும்.)
2. வேதாகமத்தில், தேவன் தம் குமாரனை அனுப்பினார், மேய்ப்பர்களும், ஞானிகளும், ராஜாக்களும் கூட அவரை ஆராதித்தார்கள் என்று வாசிக்கிறோம், உன் வாழ்க்கையில், இயேசுவுடைய வாழ்க்கையின் எந்தப் பகுதிக்காக அவருக்கு அதிக நன்றியுள்ளவனாக / நன்றியுள்ளவளாக இருக்கிறாய்? அவரது பிறப்பா, அவரது வாழ்க்கையா, உன் தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி அவர் மரித்ததா, அல்லது அவரது உயிர்த்தெழுதலா?
3. அன்பான இயேசுவே, ஒரு குழந்தையாக நீர் வந்ததற்காக நன்றி. இயேசுவே, என் இரட்சகராக இருந்து, என் தண்டனையை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி. இயேசுவே, நீர் என் கர்த்தராக இருப்பதற்காக நன்றி. ஆராதனைப் பாடல்களைப் பாடுவதைத் தவிர உம்மை நான் ஆராதிக்கும் மற்ற வழிகளையும் எனக்குக் காண்பித்தருளும். (சற்று நிறுத்தவும்) இயேசுவே, என் வார்த்தைகளாலும், செய்கைகளாலும், மனப்பான்மைகளாலும், உம்முடைய அற்புதமான கிரியைகளைப் பிறருக்குச் சொல்ல எனக்கு உதவும்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# ஆராதனை

## பயிற்சித்தாள

❶ ஆராதனைப் பற்றிய ஜெபத்தின் 5-ஆம் வரியை நினைவுபடுத்தி, எழுத முடியுமா?

❷ கோடிட்ட இடங்களை நிரப்புக.

சங்கீதம் 9:1 "________________, என் ________________ உம்மைத் ________________;

உம்முடைய ________________ ________________"

❸ இயேசுவை ஆராதிப்பதற்கான பல்வேறு வழிகளைக் குறிப்பிடுக.

❹ எது உனக்கு மிகவும் பிடித்த ஆராதனை முறை?

❺ பதில் நேரம்:

மராக்கா போன்ற இசைக் கருவிகளைச் செய்வது எளிமையாகவும், விளையாட்டாகவும் இருக்கும். ஒரு காலி பாட்டிலை பாதி அளவுக்கு அரிசி மற்றும் காய்ந்த பீன்ஸ் கொண்டு நிரப்பவும். ஸ்டிக்கர் மற்றும் மார்க்கர் வைத்து பாட்டிலை அலங்கரிக்கவும். பின்னர், அதைக் குலுக்கி, இயேசுவுக்காகப் பாடி, நடனமாடி மகிழவும்!

# ஆராதனை

## ராப் பாடல்!




இயேசு நம் துதிக்குப் பாத்திரர்!

ஆமென், ஆமென்!

தினமும் நாள்முழுதும் அவரைத் துதிக்க வேண்டும்!

ஆமென், ஆமென்!

தம் பிள்ளைகள் பாடுவது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி!

ஆமென், ஆமென்!

இயேசு பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க வந்தார்!

ஆமென், ஆமென்!

என்றென்றும் கிறிஸ்துவை நம் ராஜாவாகக் காண்போம்!

ஆமென், ஆமென்!

என்றென்றும் அவரை நம்முடைய ராஜாவாகிய கிறிஸ்துவாகக் காண்கிறோம்!

ஆமென், ஆமென்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# அர்ப்பணிப்பு

இயேசுவே, உம்மை என்
கர்த்தராகக் கொண்டு,
பின்பற்ற விரும்புகிறேன்.
நீர் விரும்புகிறபடி
என்னை மாற்றும்.



பேதுரு குறைவுள்ளவராக இருந்தார் • லூக்கா 22:54-62



லூக்கா 9:23

ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.



# அர்ப்பணிப்பு

## உன்னால் சொல்ல முடியுமா?

*இயேசுவே, உம்மை என் கர்த்தராகக் கொண்டு, பின்பற்ற விரும்புகிறேன். நீர் விரும்புகிறபடி என்னை மாற்றும்.*

லூக்கா 9:23
ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மத்தேயு 4:18-22*
*மத்தேயு 16:24*
*கலாத்தியர் 2:20*

## உங்களால் உணர முடிகிறதா?

இயேசுவைப் பின்பற்றுவது என்பது என்ன?

தேவன் என்னை எப்படி மாற்றுகிறார்?

நீ யாரை அல்லது எதைப் பின்பற்ற உன்னை அர்ப்பணித்திருக்கிறாய்?

# அர்ப்பணிப்பு

## "பாப்கார்ன் ஜெபம்" குழு பிரித்தல்

"இயேசுவே, உம்மை என் கர்த்தராகக் கொண்டு, பின்பற்ற விரும்புகிறேன். நீர் விரும்புகிறது போல என்னை மாற்றும்" என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- அர்ப்பணிப்பு என்பது ஒரு நபர் அல்லது ஒரு காரியத்தின் மீது விசுவாசமாக இருப்பதற்கான வாக்குறுதி.
- அர்ப்பணிப்புக்கு நேரம், பணம், மற்றும் கடின உழைப்புத் தேவைப்படும். அது ஒரு விளையாட்டு அணியில் இருப்பதைப் போன்றது – அதற்கு நீ கட்டணம் செலுத்தி, பயிற்சிக்குச் சென்று, போட்டிகளில் விளையாட வேண்டும்.
- இயேசுவை உன் வாழ்வின் கர்த்தராகப் பின்பற்ற உன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.
- "நீர் விரும்புகிறபடி என்னை மாற்றும்" என்பது இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலுமாக உன் வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்புவதைச் சொல்லும் முறை.
- அர்ப்பணிப்பைக் காத்துக் கொள்வது அத்தனை எளிதல்ல.
- அர்ப்பணிப்பைப் பற்றிப் பேசும்போது, பிள்ளைகள் (விளையாட்டு, இசை போன்ற காரியங்களில்) தாங்கள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புகளைக் குறிப்பிடட்டும். அந்த அர்ப்பணிப்புகளைக் காத்துக் கொள்வதில் சுலபமானது எது, கடினமானது எது? இயேசுவை அர்ப்பணிப்புடன் பின்பற்றுவது என்றால் என்ன? என்பதைப் பற்றிப் பேசுங்கள். அவை எந்த விதங்களில் வித்தியாசமாக இருக்கின்றன? எந்த விதங்களில் ஒத்திருக்கின்றன? பிள்ளைகள் திறந்த மனதுடனும், நேர்மையாகவும் பகிர்ந்து கொள்ள உற்சாகப்படுத்துங்கள்.

# அர்ப்பணிப்பு

## உங்களால் கேட்க முடிகிறதா?

### பேதுரு குறைவுள்ளவராக இருந்தார் (லூக்கா 22:54-62)

ஒருமுறை பேதுரு இயேசுவிடம், “எல்லாரும்  உம்மை மறுதலித்தாலும், நான் ஒருபோதும் உம்மை மறுதலிக்க மாட்டேன்!” என்று சொன்னார். எல்லாவற்றையும் அறிந்திருந்த இயேசு பேதுருவிடம், சேவல் கூவுவதற்கு முன்னர், பிரதான ஆசாரியனின் வீட்டு முற்றத்தில், பேதுரு தம்மை மூன்று முறை மறுதலிப்பார் என்று சொன்னார். அங்குதான் இயேசுவைச் சிலுவையில் அறையும் முன்னர் விசாரித்தார்கள்.



இயேசு சொன்னபடியே நடந்தது. ஒரு வேலைக்காரப் பெண் பேதுருவைப் பார்த்து, “நீயும் இயேசுவுடன் இருந்தாய்” என்று சொன்னாள். பேதுருவோ, “இல்லவே இல்லை – நீ யாரைப் பற்றிப் பேசுகிறாய் என்றே எனக்குத் தெரியவில்லை!” என்று கத்தினார். பின்னர், இன்னுமொரு வேலைக்காரப் பெண் அங்கிருந்தவர்களிடம், “இவரும் இயேசுவுடன் இருந்தார்” என்று சொன்னபோது, மீண்டும் பேதுரு மறுதலித்தார். சற்று நேரம் கடந்தது. பேதுருவுக்கு ஒரே பயமும், பதற்றமுமாக இருந்தது. மற்றவர்கள் தன்னை அடையாளம் கண்டுக் கொள்ளக் கூடாது என்று நினைத்தார், ஆனால் மீண்டும் அது நடந்தது! “நீயும் அவர்களில் ஒருவன் என்று எங்களுக்குத் தெரியும். நீயும் கலிலேயனைப் போலப் பேசுகிறாய்.” பேதுரு சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கி, “நான் அவரை அறியேன்!” என்று சொல்லிவிட்டார். அதன் பின்னர், இயேசு சொன்னது போலவே, சேவல், “கொக்கரக்கோ!” என்று கூவியது. ஓ, ஓ, திடீரென பேதுருவுக்கு இயேசு சொன்னது நினைவுக்கு வந்துவிட்டது, அவர் ஓடிப் போய், கதறி அழுதார். இயேசு சொன்னது போலவே தாம் செய்ததை அறிந்த பேதுரு மிகவும் மனஸ்தாபப்பட்டார். ஆனால், இயேசு பேதுருவை விட்டுவிடவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், திபேரியா கடற்கரையில் அவர் தம் சீஷர்களுடன் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது, இயேசு பேதுருவிடம், “பேதுருவே, நீ என்னை நேசிக்கிறாயா?” என்று மூன்று முறைக் கேட்டார். ஒவ்வொரு முறையும் பேதுரு, “ஆம், ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்” என்று பதில் சொன்னார். ஒவ்வொரு முறையும் இயேசு, “என் ஆடுகளை மேய்ப்பாயாக” என்று சொன்னார். பேதுரு தம்முடைய சீஷனாக இருந்து, மற்றவர்களை சீஷர்களாக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார். பேதுரு தவறே செய்யாதவர் என்று சொல்ல முடியாது, ஆனால் அவர் உண்மையில் தம்மைப் பின்பற்ற விரும்புகிறார் என்பதை இயேசு அறிந்திருந்தார். அதன் பின்னர் பேதுரு ஒருபோதும் இயேசுவை மறுதலிக்கவே இல்லை.

## உன்னால் செய்ய முடியுமா?

- இயேசுவை உன் வாழ்வின் கர்த்தராகக் கொண்டு, அவரைப் பின்பற்ற அர்ப்பணி.
- உன்னுடைய எண்ணங்கள், செய்கைகள், மற்றும் விருப்பங்களை முற்றிலுமாக இயேசுவின் கட்டுப்பாட்டில் விட்டுக் கொடுக்க அர்ப்பணி.
- உனக்கு இந்த உலகத்தில் இருக்கும் எதையும் விட இயேசுவே மேலானவர் என்பதையும், நீ அவரைப் பின்பற்றவும், கீழ்ப்படியவும், அவரைப் போல மாறவும் விரும்புகிறாய் என்பதையும் அவருக்குத் தெரியப்படுத்து.

# அர்ப்பணிப்பு

## விளையாடு!

**சரியா, தவறா**

1. அறையின் நடுப்பகுதியில், பிள்ளைகளை ஒருவர் பின் ஒருவராக வரிசையாக நிற்கச் செய்யவும்.
2. அவர்கள் நிற்கும் வரிசை அறையைச் சரிபாதியாக பிரிக்கட்டும். அதில் ஒரு வலது புறமும், இடது புறமும் இருக்கும். நீங்கள் ஒரு கேள்வி கேட்கும்போது, பிள்ளைகள் அதற்கு சரி அல்லது தவறு என்று பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லுங்கள். ஆனால், “சரி” அல்லது “தவறு” என்று சொல்லாமல், சரி என்னும் பதிலுக்கு வலது புறத்திற்கும், தவறு என்னும் பதிலுக்கு இடது புறத்திற்கும் ஓட வேண்டும்.
3. “நிலா பச்சை நிற சீஸ் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது!” என்பது போன்ற வேடிக்கையான கேள்விகளைக் கேட்டுத் தொடங்கவும் (இதற்கான பதில் தவறு என்பதால், பிள்ளைகள் தங்கள் இடது புறத்தில் இருக்கும் சுவரை நோக்கி ஓட வேண்டும்).
4. வேடிக்கைப் பகுதி: சுவர் பக்கம் கடைசியாகப் போகும் இருவரை அவுட் என அறிவித்து, அடுத்தப் போட்டி வரை அவர்களை உட்கார வைக்க வேண்டும். நான்கு பேர் மிஞ்சியிருக்கும் வரை விளையாடிக் கொண்டிருந்து, அந்த நான்கு பேரை “சத்திய வெற்றிவீரர்கள்” என்று அறிவிக்கலாம்.
5. முக்கியக் குறிப்பு: முந்தின பாடங்களை நினைவுபடுத்தும் கேள்விகளைக் கேட்கலாம், “நல்ல மேய்ப்பரான இயேசு இழந்த ஆடுகளின் எண்ணிக்கை 0!” (இதற்கான பதில் சரி என்பதால், பிள்ளைகள் தங்கள் வலது பக்கச் சுவரை நோக்கி ஓட வேண்டும்).

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: பேதுரு உண்மை பேசவில்லை; தன்னைக் காத்துக் கொள்ள பொய் சொன்ன பேதுரு, பொய் சொன்ன பிறகு மிகவும் வருந்தினார். நாம் எப்போதும் உண்மை பேச வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். விசுவாசிகள் சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து, அதையே பின்பற்ற அர்ப்பணிக்க வேண்டும்.

1. இந்த விளையாட்டில், “சரி” அல்லது “தவறு” என்ற இரண்டு பதில்கள் மட்டுமே இருந்தன. சரி என்ற பதிலுக்கு நீ எந்தப் பக்கம் ஓடினாய்? (வலது பக்கம்)
2. வேதாகமத்தில், பேதுரு உண்மை சொன்னாரா, அல்லது பொய் சொன்னாரா? பேதுரு ஏன் பொய் சொன்னார்? உண்மைச் சொல்லவும், பொய்ச் சொல்லவும் உனக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டால், எதைத் தெரிந்து கொள்ள வேண்டும்? (உண்மை சொல்வதை) ஏன்? (பொய் சொன்னால், பின்னர் வருந்த நேரிடும், பொய் சொன்னால் தேவனுக்குக் கீழ்ப்படியாததாகி விடும்)
3. அன்பான இயேசுவே, உம்மை என் கர்த்தராகக் கொண்டு, பின்பற்ற விரும்புகிறேன். நீர் விரும்புகிறபடி என்னை மாற்றும். இயேசுவே, உம்மைப் பின்பற்றுவதற்கான வழிகளை எனக்குக் காண்பியும். (சற்று நிறுத்தவும்) அந்த வழி சுலபமானதாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் நீர் என்னை நடத்துவீர் என்று நம்புகிறேன்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# அர்ப்பணிப்பு

## பயிற்சித்தாள

1. அர்ப்பணிப்பு பற்றிய ஜெபத்தின் 6-ஆம் வரியை நினைவுபடுத்தி எழுத முடியுமா?

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   லூக்கா 9:23 "ஒருவன் _____________ விரும்பினால், அவன் _____________ வெறுத்து, தன் _____________ _____________ எடுத்துக் கொண்டு, என்னைப் ____________________"

3. இயேசுவைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிப்பு தேவைப்படுவது ஏன்?

4. நீ எவற்றிற்கு அர்ப்பணித்திருக்கிறாய்?

5. பதில் நேரம்:

   உன் கண்களை மூடிக் கொண்டு, இயேசுவிடம், "நான் ஆவலுடனும், அர்ப்பணிப்புடனும் உம்மைப் பின்பற்றினால் எப்படி இருப்பேன்?" என்று கேட்டு, அவர் சொல்வதைக் கவனி. நீ என்ன செய்து கொண்டிருப்பாய்? என்று இயேசு உனக்குக் காண்பிப்பவைகளை ஒரு படமாக வரைந்து, உன் வகுப்பில் இருப்பவர்களிடமும், உன் பெற்றோரிடமும் காண்பி.

# அர்ப்பணிப்பு

## ராப் பாடல்!




நாள் முழுவதும் அம்மாவுக்கு உதவுகிறாய்

நல்லது! நல்லது!

விளையாட ஒப்புக் கொண்டு போய் விளையாடாமல் இருக்கிறாய்

நல்லதல்ல! நல்லதல்ல!

படிக்கத் தடுமாறும் நண்பனுக்கு உதவுகிறாய்

நல்லது! நல்லது!

பியானோ வகுப்புக்குப் போகாமல் சும்மா இருக்கிறாய்

நல்லதல்ல! நல்லதல்ல!

கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றுகிறாய்

நல்லது! நல்லது!

வாக்குறுதிகளைக் காத்துக் கொண்டு, ஜெபிக்க மறவாதே!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!



# சார்ந்திருத்தல்

என்னை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும். எனக்கான உம் திட்டங்களை அறிய விரும்புகிறேன்.

தேற்றரவாளன் • யோவான் 14:15-31



எபேசியர் 5:18B
ஆவியினால் நிறைந்து [இருங்கள்].



# சார்ந்திருத்தல்

## உன்னால் சொல்ல முடியுமா?

*என்னை உம்முடைய பாரிசுத்த ஆவியினால் நிரப்பும். எனக்கான உம் திட்டங்களை அறிய விரும்புகிறேன்*

எபேசியர் 5:18b
ஆவியினால் நிறைந்து [இருங்கள்].

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*அப்போஸ்தலர் 2:1-17*
*ரோமர் 8:26, 27*
*ரோமர் 15:13*
*கலாத்தியர் 5:22-26*
*யோவான் 16:13 அ*

## உங்களால் உணர முடிகிறதா?

ஆவியினால் நிறைந்திருப்பது என்றால் என்ன?

தேவனைச் சார்ந்திருப்பது என்றால் என்ன?

தேவனுடைய சத்தத்தைக் கேட்பது என்றால் என்ன?

ஆவியினால் நிறைந்து இருப்பது எப்படி?

# சார்ந்திருத்தல்

## “பாப்கார்ன் ஜெபம்”குழு பிரித்தல்

“என்னை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும். எனக்கான உம் திட்டங்களை அறிய விரும்புகிறேன்” என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- தேவன் நம்முடன் பேச விரும்புகிறார். சில சமயங்களில், அவர் பேசுவதை நாம் கேட்பது கடினமானதாக இருக்கிறது. ஆனால், தொடர்ந்து கவனித்தோமானால், அவருடைய சத்தத்தை அறிந்து கொள்ளலாம்.
- நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியைச் சார்ந்திருக்க வேண்டும். நம்முடைய வல்லமையை அல்ல, தேவனுடைய வல்லமையை நம்பியிருக்க வேண்டும்.
- இயேசுவைப் போல மாற, அவருடைய ஆவியைச் சார்ந்து கொள்ள வேண்டும்.
- நீ பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தால், இயேசு உன்னை அதிகமதிகமாகப் பயன்படுத்துவார்.
- உனக்கு அதிகமான அன்பும், சந்தோஷமும், சமாதானமும், பொறுமையும், ஆவியின் மற்ற கனிகளும் உண்டாகும்.

உன்னை தினமும் வழிநடத்துவதற்கு சார்ந்து கொள்ளக் கூடிய ஒரு நண்பனும், ஆறுதல் தருபவரும் கூட இருந்தால் எப்படி இருக்கும் என்பதைப் பற்றிப் பேசி கலந்துரையாடலைத் தொடங்குங்கள். அந்த உறவு எப்படி இருக்கும்? ஆவியின் கனியைப் பற்றிப் பேசி, பிள்ளைகள் தங்களுக்குக் கடினமானதாக இருக்கும் கனிகளைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

# சார்ந்திருத்தல்

## உங்களால் கேட்க முடிகிறதா?

### தேற்றரவாளன் (யோவான் 14:15-31)

சற்று நேரமெடுத்து, கண்களை மூடி, நீ உண்மையாக நேசிக்கும் ஒரு நண்பனை கற்பனை செய்து கொள். அவனுடைய /அவளுடைய முகத்தை உன்னால் பார்க்க முடிகிறதா? இப்போது, அவன் / அவள், “நான் நாளைக்குப் புறப்படுகிறேன், உன்னால் வர முடியாத தூரமான ஒரு இடத்திற்குப் போகிறேன். ஆனால், நீ கவலைப்படாதே. என்னுடைய ஆவியை உன்னோடு பேசுவதற்கும், விளையாடுவதற்கும் விட்டுப் போகிறேன்” என்று சொல்வதாக யோசித்துப் பார். ஆனால், இது தேவனால் மட்டுமே செய்ய முடிந்த ஒன்று. இயேசு சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, பரலோகத்தில் இருக்கும் பிதாவின் வலது பக்கத்தில் போய் அமரும் முன்னர் நடந்தது இதுதான். அவர் நம்மைத் தனியே விட்டுப் போகவில்லை. யோவான் 14:16-17 –ல் இயேசு, “நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்” என்று சொன்னார். இயேசு தம் ஆவியை அனுப்பி, சபை தன் ஊழியத்தைத் தொடங்கச் செய்தார். சில நாட்களுக்குள், பெந்தகொஸ்தே என்னும் விசேஷித்த நாளில், ஒரு பலத்த காற்று அடிக்கும் வேளையில் அவர் எல்லோரையும் தம் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். அவருடைய ஆவியானவர் எப்போதும் அவர்களுடன் தேற்றரவாளனாகவும், கற்பிப்பவராகவும், வழிநடத்துபவராகவும் இருப்பார். உன்னையும் என்னையும் போல அவருடைய பிள்ளையாக இருக்கும் எல்லோருக்குள்ளும் அதே பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார். அவர் தம் ஆவியினால் நம்மை வழிநடத்த விரும்புகிறார். நாம் கவனிக்கிறோமா?



## உன்னால் செய்ய முடியுமா?

- உன்னை வழிநடத்தி, தேற்றி, கற்றுக் கொடுப்பதற்கு தேவனுடைய ஆவியைச் சார்ந்து கொள்.
- உன் பரம தகப்பனிடம் ஒவ்வொரு நாளும் உன்னைத் தம் ஆவியினால் நிரப்பும்படிக் கேள்.
- நான் சற்று நேரமெடுத்து, தேவன் சொல்வதைக் கவனிக்க முடிகிறதா? “தேவனுக்கு மேலான ஐந்தைக் கொடு!” என்பதற்கு, உன்னதமான தேவனுடன் ஐந்து நிமிடம் அமைதியாக அமர்ந்திருப்பது என்று அர்த்தம். பேசுவதை விட கவனிப்பது அதிக முக்கியம். தேவன் எப்படி உன்னுடன் பேசுவார்? சங்கீதம் 46:10 –ஐச் சேர்ந்து வாசிக்கவும்.

# சார்ந்திருத்தல்

## விளையாடு!

**சைமன் செஸ்**

1. விளையாட்டைத் தொடங்குவதற்கு முன், பிள்ளைகள் நன்றாக கவனிக்க வேண்டும் என்று சொல்லுங்கள்.
2. ஒரு பயிற்சியாளரின் பெயர் "சைமன்." சைமன் "உன் கால்விரல்களைத் தொடு" என்பது போன்ற வேண்டுகோள்களைக் கொடுப்பார். ஆனால் அவர், "சைமன் செஸ், உன் கால்விரல்களைத் தொடு" என்று சொன்னால் மட்டுமே பிள்ளைகள் அதைச் செய்ய வேண்டும்.
3. பிள்ளைகள் சைமன் சொல்லாத ஒன்றைச் செய்தால் அவுட் ஆகி விடுவார்கள்.
4. முதலில், சைமன் கேட்கும் எல்லாம் பிள்ளைகள் செய்வதற்குச் சுலபமானதாக இருக்க வேண்டும். உதாரணம்: உன் காதைத் தொடு, ஐந்து முறை குதி, குப்புறப் படு, உட்கார், நில். போகப் போக, "சைமன் செஸ், உன் கால்விரல்களைத் தொடு, ஆனால் உன் மூக்கைத் தொடாதே", "சைமன் செஸ், உன் மூக்கையும், உன் கால்விரல்களையும் தொடு", ("சைமன் செஸ்" என்று சொல்லாமல்) "உன் காதுகளைத் தொடு" போன்று சற்றுக் கடினமானவைகளை சைமன் சொல்லலாம்.
5. நான்கு பிள்ளைகள் அவுட் ஆகாமல் எஞ்சியிருக்கும் வரை விளையாடி, பின்னர் அவர்களை கவனிக்கும் வெற்றிவீரர்கள், மற்றும் பின்பற்றும் வெற்றிவீரர்கள் என்று அறிவிக்கவும்.
6. முக்கியக் குறிப்பு: மீண்டும் விளையாடவும்; இந்த முறை, சைமன் மெல்லிய சத்தத்தில் சொல்லட்டும்.
7. நான்கு பிள்ளைகள் அவுட் ஆகாமல் எஞ்சியிருக்கும் வரை விளையாடி, அவர்களை கவனிக்கும் தலைசிறந்த வெற்றிவீரர்கள், மற்றும் பின்பற்றும் தலைசிறந்த வெற்றிவீரர்கள் என்று அறிவிக்கவும்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் எப்போதும் நம்முடன் பேசிக் கொண்டிருக்கிறார். தேவன் நம்மைத் தேற்றி, நமக்குக் கற்பித்து, வழிநடத்துவார் என்று நாம் அவரை நம்பிச் சார்ந்து கொள்ள வேண்டும். நாம் கவனமாக இருந்து, தேவன் நம் இருதயத்தில் பேசுவதற்குச் செவிகொடுக்க வேண்டும்.

## கேள்விகள்

1. "சைமன்" சொல்வதை உடனே செய்ய, நீ என்ன செய்ய வேண்டியதாக இருந்தது? (சைமன் சொல்வதை நன்றாகக் கவனித்து, உடனே செய்ய வேண்டும்) சைமன் மெல்லிய சத்தத்தில் பேசியபோது, நீ என்ன செய்ய வேண்டியதாக இருந்தது?
2. நம்முடைய தேற்றரவாளனும், போதகரும், வழிநடத்துபவருமான தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு நாம் செவிகொடுக்க வேண்டும். தேவன் பேசுவதை எவ்வாறு நம்மால் கேட்க முடியும்? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? (தேவன் கொடுக்கும் கட்டளைகளுக்கு நன்றாகச் செவிகொடுத்து, கவனித்து, உடனே கீழ்ப்படிய வேண்டும்) உன்னை வழிநடத்தும்படி பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து கொண்டு, அவரை நம்பியிருக்க வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன?
3. தேவனே, என்னை உம் பரிசுத்த ஆவியால் நிரப்பும், நீர் என்னுடன் பேசும்போது, உம்முடைய மெல்லிய சத்தத்தை கவனமாகக் கேட்க எனக்கு உதவும். பரிசுத்த ஆவியானவரே, இப்போது என் இருதயத்தில் பேசி, உம்மை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றுவதற்கான ஒரு வழியைக் காண்பியும். (சற்று நிறுத்தவும்) பரிசுத்த ஆவியானவரே, நீர் என் போதகராகவும், வழிநடத்துபவராகவும் இருப்பதற்காக நன்றி.



# சார்ந்திருத்தல்

## பயிற்சித்தாள

❶ சற்று கடினமாகிக் கொண்டிருக்கிறது, ஆனால் உங்களால் செய்ய முடியும்! சார்ந்திருத்தல் பற்றிய ஜெபத்தின் 7-ஆம் வரியை நினைவுபடுத்தி கீழே எழுத முடியுமா?

❷ கோடிட்ட இடங்களை நிரப்புக.

எபேசியர் 5:18 ஆ "__________________ _____________ ______________ [இருங்கள்]."

❸ ஆவியின் கனியை எழுதவும்.

__________________ __________________ ____________________

__________________ __________________ ____________________

__________________ __________________ ____________________

❹ நீ வெளிப்படுத்த அதிகம் சிரமப்படும் அல்லது சவாலான கனி எது? அதற்கு ஜெபம் எப்படி உதவும்?

❺ பதில் நேரம்:

தேவனுக்கு மேலான ஐந்தைக் கொடு! கண்களை மூடி, தேவன் உன்னிடம் பேசுவதைக் கவனி. அவர் ஒரு வேதவசனத்தை நினைவுபடுத்தினாரா? ஏதேனும் புதிய எண்ணங்களைக் கொடுத்தாரா? யாரையாவது நினைவுபடுத்தினாரா? தேவன் உன்னிடம் சொல்வதாக நீ நினைப்பதை ஒரு தாளில் படமாக வரை அல்லது எழுது.

# சார்ந்திருத்தல்

## ராப் பாடல்!




கேட்டி தன் தோழியை ஆலயத்திற்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்தாள்.

ஆவியினால் செய்தாளா? ஆம், ஆம், ஆம்!

ஜோ படிக்காமல் தேர்வில் ஏமாற்றினான்.

ஆவியினால் செய்தானா? இல்லை, இல்லை, இல்லை!

சூஸி வகுப்பில் தன் சாட்சியைப் பகிர்ந்தாள்.

ஆவியினால் செய்தாளா? ஆம், ஆம், ஆம்!

பிரையன் தன் தங்கைக்கு சைக்கிள் ஓட்டக் கற்பித்தான்.

ஆவியினால் செய்தாளா? ஆம், ஆம், ஆம்!

பீட்டர் தன்னுடையது அல்லாததை எடுத்துக் கொண்டான்.

ஆவியினால் செய்தானா? இல்லை, இல்லை, இல்லை!

ஜெஸி ஒரு மிஷினரி பிள்ளைக்காக ஜெபிக்கத் தொடங்கினாள்.

ஆவியினால். அது ஒரு ராப்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# தாக்கம்

என்னை உம்முடைய கிருபை,
சத்தியம், மற்றும் நீதியின்
கருவியாக மாற்றும்.



இயேசுவும், சிறுபிள்ளைகளும் • மத்தேயு 18:1-6



யோவான் 1:14

கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.



# தாக்கம்

## உன்னால் சொல்ல முடியுமா?

*என்னை உம்முடைய கிருபை, சத்தியம், மற்றும் நீதியின் கருவியாக மாற்றும்.*

யோவான் 1:14
கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மத்தேயு 19:13-15*

*அப்போஸ்தலர் 2:16-17*

*லூக்கா 18:15-17*

## உங்களால் உணர முடிகிறதா?

தேவன் எனக்குக் கொடுத்திருக்கும் ஈவுகள் என்னென்ன?

தேவ கிருபையை நான் எப்படி மற்றவர்களுக்குக் காண்பிக்க முடியும்?

உண்மைக்கும், பொய்க்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பொய் சொல்வது ஏன் தவறானது?

# தாக்கம்

## “பாப்கார்ன் ஜெபம்” குழு பிரித்தல்

“என்னை உம்முடைய கிருபை, சத்தியம், நீதியின் தூதுவனாக மாற்றும்” என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- இயேசு தினமும் வியாதியுடன் இருந்தவர்களை குணமாக்கி, ஏழைகளுக்கு உதவி, நீதியை வெளிப்படுத்தினார்.
- வயதானவர், இளைஞர், பணக்காரர், ஏழை என யாராக இருந்தாலும் அவர் உதவி செய்தார்.
- எல்லோரையும் நன்றாக நடத்தினார்.
- எல்லோரிடமும் அன்பும், கிருபையும் கொண்டிருந்தார்.
- எப்போதும் உண்மையே பேசினார்.
- பிள்ளைகள் நீதியின் தூதுவர்களாக இருப்பதற்கான வழிகளைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லவும். எப்போது உண்மை சொல்வது கடினமானதாக இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசவும். தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் வைத்திருப்பது எவ்வாறு உண்மை பேச உதவும்?

# தாக்கம்

## உங்களால் கேட்க முடிகிறதா?

### இயேசுவும், சிறுபிள்ளைகளும் (மத்தேயு 18:1-6)

ஒருநாள் வெயில் அதிகமாக இருந்த மதியான நேரத்தில், சீஷர்கள் உட்கார்ந்து இயேசுவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். வீட்டிலும், பள்ளியிலும், விளையாட்டு மைதானத்திலும் நம்மில் நன்றாக நடத்தப்படுவது யார் என்று நாம் சிலநேரங்களில் யோசிப்பது போல, சீஷர்களும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் தலைகளைச் சொரிந்து கொண்டு, "ஹ்ம்ம், இயேசுவே, பரலோக ராஜ்யத்தில் யார் மிக முக்கியமானவர்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குள் ஒருவருடைய பெயரைச் சொல்வார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். இயேசுவுக்கும் அவர்கள் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பது தெரியும், எனவே அவர் ஒரு சிறுபிள்ளையை அழைத்து, "இங்கு வந்து, என் பக்கத்தில் நில்" என்று சொன்னார். பின்னர் அவர் தம் சீஷர்களைப் பார்த்து, மிகவும் வியப்புக்குரிய ஒன்றைச் சொன்னார். "இந்தச் சிறுபிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவன் ஆவான்" என்றார். அதன் பின்னர், இன்னும் வியப்பான ஒன்றைச் சொன்னார்: "என் நாமத்தில் ஒரு சிறுபிள்ளையை ஏற்றுக்கொள்ளும் எவனும் என்னையே ஏற்றுக்கொள்ளுகிறான்." ஓ! இயேசுவே அதைச் சொல்லியிருப்பார் என்றால், அது உண்மைதான், ஏனெனில் அவர் உண்மையை மட்டுமே பேசினார்.



இயேசு நீதியை விரும்பினார். ஏழைகள் மீது அக்கறை கொண்டிருந்தார். வியாதியுள்ளவர்களுக்கு மனம் இரங்கினார். மன வேதனையுடன் இருந்தவர்களுக்கு சமாதானம் கொடுத்தார். பெரும்பாலும் ஒதுக்கப்பட்டு விடுகிற சிறுபிள்ளைகளுடன் அவர் எப்போதும் நேரம் செலவிட விரும்பினார். இயேசு, "ஒரு சிறுபிள்ளையை வேதனைப்படுத்துகிறவன் கொடிய தண்டனைக்கு ஆளாவான்" என்று சொன்னார். உன்னை தேவன் எந்த அளவுக்கு நேசிக்கிறார், உன்மேல் அக்கறையாயிருக்கிறார் என்பதை உணர முடிகிறதா?

## உன்னால் செய்ய முடியுமா?

- கிருபை, சத்தியம், மற்றும் நீதி பற்றிய தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கு தேவன் உன்னைப் பயன்படுத்த விட்டுக் கொடு.
- எப்போதும் உண்மையே பேச வேண்டும் என்று உன் இருதயத்தில் தீர்மானித்துக் கொள்.
- தேவனுடைய வார்த்தையை மனனம் செய்.

# தாக்கம்

## விளையாடு!

### இங்கும், அங்கும் தண்டனை & நற்செய்தி கையசைவுகள்

1. ஒரு அறை அல்லது மைதானத்தின் ஒரு பகுதியில் பிள்ளைகள் அனைவரும் வரிசையாக நிற்க வேண்டும். சற்று தொலைவில் ஒரு பகுதியைக் குறித்துக் கொடுக்கவும். பிள்ளைகள் இங்கிருந்து (தொடக்கக் கோடு), அங்கு வரை (தொலைவில் குறித்த பகுதி) ஓடித் திரும்ப வேண்டும்.
2. முக்கியக் குறிப்பு: எல்லாப் பிள்ளைகளும் தொடக்கக் கோட்டிற்குத் திரும்பி வருவதற்கு ஆகும் நேரத்தைக் குறித்துக் கொள்ளவும். மீண்டும் பிள்ளைகளை ஓடச் சொல்லவும், ஆனால் இம்முறை அவர்கள் முன்பு எடுத்ததில் பாதி நேரத்திலேயே ஓடி முடிக்க வேண்டும், இல்லையென்றால் 10 முறை உட்கார்ந்து எழும்பும் பயிற்சி செய்ய வேண்டும். முக்கியக் குறிப்பு: கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பிள்ளைகள் ஓடி முடிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் – ஓட்டம் அவர்களைத் தோற்கச் செய்வதற்காக அமைக்கப்படுகிறது.
3. மீண்டும் பிள்ளைகளை முயற்சி செய்ய வையுங்கள். முதலில் பெண்பிள்ளைகள் மட்டும் ஓடட்டும், பின்னர் ஆண்பிள்ளைகள் மட்டும் ஓடட்டும், கடைசியில், குட்டிப் பிள்ளைகள் மட்டும் ஓடட்டும்.
4. பிள்ளைகள் பல முறை முயற்சி செய்து, தோல்வியுற்று வருந்தும்போது, அவர்கள் இலக்கை எட்டவில்லை என்றும், எட்ட முடியாததால் தண்டனைப் பயிற்சி செய்ய வேண்டும் என்றும் விளக்கவும்.
5. பிள்ளைகள் உட்கார்ந்து எழும்பும் பயிற்சியை தண்டனையாகச் செய்யத் தொடங்குவதற்குச் சற்று முன்னர், ஒரு பயிற்சியாளர் ஓடி வந்து, இப்படிச் சொல்லட்டும்: “ஐயா, நீங்கள் இந்தப் பிள்ளைகளை உட்கார்ந்து எழும்பும் பயிற்சி செய்ய வைக்கக் கூடாது! எவ்வளவு களைப்பாக இருக்கிறார்கள் பாருங்கள்!” பதில்: ஆம், ஆனால் தண்டனை உண்டு என்பது ஒப்புக் கொண்ட ஒன்றுதானே? பயிற்சியாளர்: “பொறுங்கள்! அவர்களுக்காக நான் தண்டனைப் பயிற்சி செய்கிறேன்” (வேறு எதுவும் பேசுவதற்குள் பயிற்சியாளர் 10 முறை உட்கார்ந்து எழும்பும் பயிற்சியை செய்யட்டும்).
6. அந்தப் பயிற்சியாளர் பிள்ளைகளுக்காக தண்டனைப் பயிற்சியைச் செய்யும்போது, பிள்ளைகள் அவருக்காக எண்ணட்டும். 1-2-3-4-5-6-7-8-9-10
7. பிள்ளைகளுக்கு “சிருஷ்டிப்பு முதல் கிறிஸ்து வரை - கையசைவு” எப்படிச் செய்வதென்று கற்றுக் கொடுக்கவும்.
   (அசைவுகளை அறிய பிற்சேர்க்கைப் பகுதியைப் பார்க்கவும்).

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: பிள்ளைகள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்துமாறு தேவன் அவர்களைப் பயன்படுத்த விரும்புகிறார்.

## கேள்விகள்

1. பிள்ளைகளே, தண்டனைப் பயிற்சி செய்ததால் உங்கள் கை கால்கள் சோர்ந்து போனதா? (இல்லை, ப்ளாங்க் என்னும் பயிற்சியாளர் எங்களுக்குப் பதிலாக தண்டனைப் பயிற்சியை செய்துவிட்டார்) வாவ்! உங்களுக்காக ஏன் பிளாங்க் தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும்?
2. வேதாகமத்தில், நம்முடைய பாவம், மற்றும் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களால், நமக்கு ஒரு தண்டனை விதிக்கப்பட்டது (மரணம்). நம் தண்டனையை ஏற்றுக் கொண்டவர் யார்? (இயேசு) இயேசு ஏன் உங்கள் தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும்?
3. இயேசுவே, எனக்காக நீர் மரித்து, என் தண்டனையை உம்மேல் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு நீர் என்னை நேசிக்கிறீர் என்பதற்காக உமக்கு நன்றி. பிள்ளைகளே, சற்று அமைதியாக இருந்து, இயேசு உங்களை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்று யோசியுங்கள். (சற்று நிறுத்தவும்) இயேசுவே, தயவு செய்து என் பாவங்களை மன்னியும். நான் பாவத்திலிருந்து மனந்திரும்ப விரும்புகிறேன். இயேசுவே, தயவு செய்து நீர் என் இரட்சகராயிரும். இயேசுவே, என் வாழ்க்கையில் எவ்வாறு கிருபை, உண்மை, மற்றும் நீதியைக் காண்பிக்க முடியும்? (சற்று நிறுத்தவும்) இயேசுவே, என்னையும் தேவனுடைய பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி. பரிசுத்த ஆவியே, அனுதினமும், எல்லா விதங்களிலும் என் மூலமாகப் பிரகாசியும்!



©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# தாக்கம்

## பயிற்சித்தாள

1. தாக்கம் பற்றிய ஜெபத்தின் 8-ஆம் வரியை நினைவுபடுத்தி, எழுத முடியுமா?

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   யோவான் 1:14 ___________ ___________ நிறைந்தவராய், நமக்குள்ளே ____________ ;

   அவருடைய ____________ கண்டோம்; அது ............ ஒரே ____________ மகிமைக்கு

   ஏற்ற ____________________ இருந்தது."

3. உங்கள் பள்ளி, சபை அல்லது பக்கத்து வீட்டில் புதிதாக வந்த ஒருவரை நீ ஏற்றுக் கொண்டிருக்கிறாயா? ஆம் என்றால், அந்த நபரை நீ வரவேற்றதைப் பற்றிச் சொல். இல்லை என்றால், இப்போது அதை முயற்சி செய்துப் பார்க்க விரும்புகிறாயா? நீ எந்த அளவுக்கு அதிகமாக இதைச் செய்கிறாயோ, அந்த அளவுக்கு அது சுலபமாகி விடும்!

4. கடினமான சூழ்நிலையில் யாரேனும் ஒருவரை சரியானதைச் செய்யும்படித் தூண்டியிருக்கிறாயா? ஆம் என்றால், உன் உதவிக்கு அவர் எப்படி பதில் கொடுத்தார் என்று சொல்லவும்.

5. பதில் நேரம்:

   தேவனிடம் கேட்டு, அவர் சொல்வதைக் கவனித்து பின்வரும் கேள்விகளுக்கு பதில் கொடுக்கவும். உன்னைச் சுற்றி இருப்பவர்களைச் சந்திக்கும்படி தேவன் உன்னைப் பயன்படுத்தக் கூடிய சில வழிகளை உன்னால் யோசிக்க முடிகிறதா? சபையில் ஒரு ஜெபக்குழு ஆரம்பிக்க உன்னைப் பயன்படுத்தலாமா? ஆலயத்திற்குப் போகாத சில நண்பர்களை ஆலயத்திற்கு அழைக்கலாமா? புதிதாக வந்த பக்கத்து வீட்டுப் பிள்ளை, அல்லது உன் வகுப்பில் உள்ள ஒரு பிள்ளையை ஏற்றுக் கொள்ளலாமா?

# தாக்கம்

## ராப் பாடல்!




நான் உம் உண்மையின் தூதுவனாக இருக்க விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

நான் உம் கிருபையின் வார்த்தையைப் பேச விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

தினமும் என் வாழ்வில் உம் நீதியைக் காண்பிக்க விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

காணாமலும், வழிவிலகியும் போனவர்களுக்கு உதவ விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

வசதி இல்லாதவர்களுக்கு உதவ விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவ விரும்புகிறேன்!

விரும்புகிறேன்! விரும்புகிறேன்!

உம் அன்பின் தூதுவனாக இருக்க விரும்புகிறேன்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# சீஷராக்குதல்

உம்முடைய மகிமைக்காகவும்,
உம்மைப் பின்பற்ற பிறரை
அழைக்கும்படியும் என்னைப்
பயன்படுத்தும்.



தர்ஷீஸைச் சேர்ந்த சவுல் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய
பவுலாக மாறுகிறார் • அப்போஸ்தலர் 9:1-22



மத்தேயு 28:19

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து...”



# சீஷராக்குதல்

## உன்னால் சொல்ல முடியுமா?

*உம்முடைய மகிமைக்காகவும், உம்மைப் பின்பற்ற பிறரை அழைக்கும்படியும் என்னைப் பயன்படுத்தும்.*

மத்தேயு 28:19
ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து…”

## உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மாற்கு 16:15*
*யோவான் 17:4-5*
*ரோமர் 10:13-17*
*கொலோசெயர் 3:17*

## உங்களால் உணர முடிகிறதா?

மிஷினெரி என்பவர் யார்?

சீஷர் என்பவர் யார்?

இயேசுவைப் பற்றிப் பிறருக்குச் சொல்வதற்கான சில வழிகள் யாவை?

தேவனுடைய மகிமைக்காக ஒன்றைச் செய்வது என்பதன் அர்த்தம் என்ன?

# சீஷராக்குதல்

## “பாப்கார்ன் ஜெபம்” குழு பிரித்தல்

“உம்முடைய மகிமைக்காகவும், உம்மைப் பின்பற்ற பிறரை அழைக்கும்படியும் என்னைப் பயன்படுத்தும்” என்று சொல்லத் தொடங்கி, பிள்ளைகளை மீண்டும் ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் ஜெபத்தை மீண்டும் சொல்லட்டும். தேவனை நேசித்துக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்வதற்கு உதவுமாறு தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு-வாக்கிய ஜெபங்களை அவர்களே தேவனை நோக்கிச் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- மிஷனெரிகள் என்பவர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டவர்கள்.
- பெரும்பாலும் அவர்கள் தூர தேசங்களுக்குச் சென்று தெரியாத மொழியையும் கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அதற்கு வாழ்க்கை முழுவதும் தேவனுக்காகத் தியாகமும், பக்தியும் அவசியம்.
- பள்ளி, வீடு என நாம் வசிக்கும் இடங்களில் எல்லாம் நாம் இயேசுவின் ஒளியை வீசும் மிஷனெரிகளாக இருக்க வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம்.

பிள்ளைகள் தங்கள் சபையில் அல்லது உலகத்தில் தாங்கள் அறிந்த மிஷனெரிகளின் கதைகளைச் சொல்லத் தொடங்கட்டும். அவர்கள் தங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் இயேசுவைப் பகிர்ந்து கொள்வதற்கான வழிகளைப் பற்றிப் பேசுமாறு உற்சாகப்படுத்துங்கள்.

# சீஷராக்குதல்

## உங்களால் கேட்க முடிகிறதா?

**தர்ஷீஸைச் சேர்ந்த சவுல் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலாக மாறுகிறார் (அப்போஸ்தலர் 9:1-22)**

முன்பு கிறிஸ்துவையும், அவரைப் பின்பற்றியவர்களையும் வெறுத்து, அவர்களின் எதிரியாக இருந்த பவுல், ஆதித் திருச்சபையின் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவரும், நற்செய்தியைப் பிரசங்கிக்கும் மிஷினெரியாகவும் மாறினார். ஒருநாள் சவுல் (அவரது பெயர் பவுல் என்று மாறும் முன்னர்) தமஸ்குவுக்குப் போகும் வழியில் போய்க் கொண்டிருந்தார். அப்போது, மிகப் பிரகாசமான ஒரு வெளிச்சம் அவர் மீது வீச, அவர் கீழே விழுந்து விட்டார். அந்த வெளிச்சத்தினால் அவருடைய கண்கள் குருடானது. அப்போது, "சவுலே, நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்ற சத்தத்தைக் கேட்ட சவுல், "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்டார். "நீ துன்புறுத்துகிற இயேசுதான் நான்." சவுல் பயந்து நடுங்கத் தொடங்கினார். பின்னர், தேவன் அனனியா என்னும் தேவபக்தியுள்ள மனிதரிடம் சவுலைச் சந்திக்கப் போகும்படி சொன்னார். "அனனியா, நீ போய் சவுல் பார்வையடைய உதவிச் செய். அவனை நான் ஒரு மிஷினெரியாகத் தெரிந்து கொண்டுள்ளேன்." அனனியாவுக்கு ஒன்றும் புரியவில்லை. சவுல் கிறிஸ்தவர்களுக்குச் செய்த எல்லாக் கொடுமைகளையும் அவர் கேள்விப்பட்டிருந்தார் என்றாலும், தேவன் சொன்னதற்குக் கீழ்ப்படிந்தார். தேவன் சவுலை குணமாக்கினார், சவுல் தான் போன இடங்களிலெல்லாம் இயேசுவைப் பற்றி பிரசங்கம் பண்ணத் தொடங்கினார். அநேகர் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களானார்கள். பின்னர் சவுலின் பெயர் பவுல் என்று மாற்றப்பட்டது. வேதாகமம் முழுவதும் பவுலின் போதனைகளும், சபைகளுக்கு அவர் எழுதிய கடிதங்களும் நிறைந்து உள்ளன. இயேசுவுக்காக உலகத்தைத் தலைகீழாக மாற்றிய அவர் தேவனுக்கு மகிமை செலுத்தி, மற்றவர்களும் அதேபோல் செய்யும்படிக் கற்பித்தார்.



## உன்னால் செய்ய முடியுமா?

- நீ செய்வதனைத்தையும் தேவனுடைய மகிமைக்காகச் செய்வேன் என்று தீர்மானம் செய்.
- உன்னுடைய தாலந்துகளும், திறமைகளும் தேவனுடமிருந்துதான் வருகின்றன என்பதை அறிந்து கொள்.
- நீ செய்யும் அனைத்தும் இயேசுவுக்கு நீ கொடுக்கும் அன்பின் பரிசாக இருக்கட்டும்.
- இயேசுவைப் பின்பற்றும்படி பிறரை அழைப்பதற்கு தேவன் உனக்குத் தைரியம் கொடுக்க வேண்டும் என்று கேள்.
- நீ போகுமிடமெல்லாம் அவருடைய அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு தேவனிடம் கேள்.
- 'சிருஷ்டிப்பு முதல் கிறிஸ்து வரை – கையசைவுகளைப்' பயன்படுத்தி, ஒரு நண்பர் அல்லது குடும்பத்தினரிடம் நற்செய்தியைப் பகிர்ந்து கொள். இந்தச் சுலபமான விளையாட்டு முறையை 109 –ஆம் பக்கத்தில் காணலாம்.

# சீஷராக்குதல்

## விளையாடு!

### வலைவீசி பிடி

1. விளையாட்டிற்கான இடத்தைப் பிள்ளைகளிடம் காண்பிக்கவும்.
2. பாதுகாப்பிற்காக: பிள்ளளைகள் அதிகமாக இருந்தால், சிறுபிள்ளைகளை ஒரு பக்கமும், சற்று பெரிய பிள்ளைகளை மறு பக்கமும் வைத்து பல குழுக்களாகப் பிரித்துவிடவும்.
3. முக்கியக் குறிப்பு: எல்லா பிள்ளைகளும் வலையில் பிடிபடும் வரை போட்டி முடிவடையாது என்று விளக்கவும்.
4. முக்கியக் குறிப்பு: இருப்பதிலேயே ஒரு சிறிய பிள்ளையை தெரிந்தெடுத்து, அதற்கு "அது" என்று பெயரிடவும். "அது" –வாக இருக்க ஒரு பிள்ளையை மட்டும் தெரிந்தெடுக்கவும். அப்படி "அது" -வாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பிள்ளை மற்றவர்களைத் துரத்தி, ஒருவரைப் பிடிக்க வேண்டும் (கையால் அவனை / அவளைத் தொட வேண்டும்). மற்ற பிள்ளைகள் தப்பிக்க முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.
5. "அது" பிள்ளை இன்னும் ஒரு பிள்ளையைப் பிடித்ததும், அவர்கள் இருவரும் இப்போது "அது" –வாக மாறிவிடுவார்கள். அவர்கள் இருவரும் ஒரு "வலை" போலக் கைகோர்த்துக் கொள்ள வேண்டும்.
6. பிடிக்கப்படும் ஒவ்வொருவரும் "வலை"-யுடன் சேர்ந்து கொண்டு – நீண்ட வரிசையில் கைகோர்த்து நிற்க வேண்டும்.
7. எல்லோரும் "வலை" –யில் பிடிபடும் வரை விளையாடிக் கொண்டே இருக்கவும்.
8. நேரம் இருக்குமானால், நிறைய சுற்றுகள் விளையாடவும். ஒவ்வொரு முறையும் ஒரு சிறு பிள்ளையை "அது" –வாகத் தெரிந்தெடுத்து தொடங்கவும்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையைப் பிடிக்கத் தொடங்கி, பின்னர் வலை பெரிதானதும் ஒரே நேரத்தில் நிறைய பிள்ளைகளைப் பிடிக்க முடிந்தது. இறுதியில் எல்லோருமே வலையில் பிடிபட்டார்கள். சீஷராக்குதல் ஒரே ஒருவருடன் தொடங்கி பின்னர் பலராகப் பெருகச் செய்கிறது!

1. இந்த விளையாட்டில் போட்டியை முடிக்க எத்தனை பேரை வலையில் பிடிக்க வேண்டியதாக இருந்தது? மூன்று பேரா, நான்கு பேரா? (எல்லோரையும்!) பொறு, எப்படி ஒருவரால் எல்லோரையும் பிடிக்க முடிந்தது? (ஒருவர் இன்னும் ஒருவரைப் பிடிப்பதில் தொடங்கிப் பின்னர் அவர்கள் சேர்ந்து வேகமாகப் பலரைப் பிடிப்பதாக மாறிவிட்டது)
2. வேதாகமத்தில், இயேசு தம்மைப் பின்பற்றும் சீஷர்களிடம் செய்யும்படிச் சொன்னதென்ன? ஒரே ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களை மட்டும் சீஷர்களாக மாற்றுங்கள் என்று சொன்னாரா? (இல்லை, எல்லாப் பிரிவில் இருப்பவர்களையும்!)
3. அன்பான இயேசுவே, எல்லாப் பிரிவில் இருப்பவர்களையும் சீஷராக்கி, உமக்குக் கீழ்ப்படிய விரும்புகிறேன். இன்றே நான் எல்லாப் பிரிவினருக்காகவும் ஜெபித்து, எனக்குத் தெரிந்த எல்லோருக்கும் இயேசுவைப் பற்றிச் சொல்லப் போகிறேன். தேவனே, உம்மைப் பின்பற்றும்படி யாரை நான் உற்சாகப்படுத்த வேண்டும் என்று எனக்குக் காண்பியும். (சற்று நிறுத்தவும்) இயேசுவே, சீஷராக்கும் வேலையை நன்றாகச் செய்ய எனக்குக் கற்பியும்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# சீஷராக்குதல்

## பயிற்சித்தாள

1. நிறைவுப் பகுதிக்கு வந்துவிட்டாய்! சீஷராக்குதல் பற்றிய ஜெபத்தின் 9-ஆம் வரியை நினைவுபடுத்தி எழுத முடியுமா?

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.
மத்தேயு 28:19 “நீங்கள் ________________ போய் சகல ____________ __________,

__________ __________ __________ பரிசுத்த ____________ அவர்களுக்கு

ஞானஸ்நானங்கொடுத்து ______”

3. மிஷினெரி என்றால் என்ன?

4. நாம் வசிக்கும் இடங்களில் எப்படி நீயும் நானும் மிஷினெரிகளாக இருந்து சீஷர்களை உருவாக்க முடியும்?

5. பதில் நேரம்:
இயேசுவை அறியாத ஒருவரின் பெயரைச் சொல். அவரின் பெயரை ஒரு அட்டையில் எழுதி, தினமும் அவருக்காக ஜெபிக்க அர்ப்பணி. தேவன் தம் அன்பை மற்றவர்களுக்குச் சொல்ல உன்னைப் பயன்படுத்த முடியும் என்பதை நினைவில் கொள்!

# சீஷராக்குதல்

## ராப் பாடல்!




தேவனைப் போல் நேசிக்கும் இதயம் வேண்டும்.

ஆம், ஆம்!

தேவனைப் போல் சேவை செய்யும் இதயம் வேண்டும்.

ஆம், ஆம்!

தேவன் தம் முடிவற்ற அன்பின் கதையைச் சொல்ல,

ஆம், ஆம்!

தம் சிறுபிள்ளையாகிய என்னைப் பயன்படுத்துவார்.

ஆம், ஆம்!

இயேசுவின் நாமத்தில் சென்று சீஷர்களை உருவாக்க வேண்டும்

ஆம், ஆம்!

நான் போய்ச் சீஷராக்க எனக்கு உதவுவீரா?

ஆம், ஆம்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# அதிகாரம்

இயேசுவின் நாமத்தில்
ஜெபிக்கிறேன். ஆமென்.



பர்திமேயு குருடன் • மாற்கு 10:46-52



பிலிப்பியர் 2:9, 11B

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.



# அதிகாரம்

## உன்னால் சொல்ல முடியுமா?

*இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.*

பிலிப்பியர் 2:9, 11b

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

### உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

*மத்தேயு 1:21*

*மத்தேயு 28:18*

*யோவான் 14:13*

*அப்போஸ்தலர் 4:12*

### உங்களால் உணர முடிகிறதா?

இந்த உலகம் உன் பொறுப்பில் இருந்தால் நீ என்ன ஆகும்?

இயேசுவின் நாமத்தில் வல்லமை இருப்பது ஏன்?

இந்த உலகம் இயேசுவின் பொறுப்பில் இருப்பது நல்லது, ஏன்?

நாம் ஏன் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்?

# அதிகாரம்

## “பாப்கார்ன் ஜெபம்” குழு பிரித்தல்

பிள்ளைகளை ஜெப நேரத்திற்குள் நடத்துங்கள். பிள்ளைகள் இயேசுவின் நாமத்தில் ஒரு-வாக்கிய ஜெபங்களைச் சொல்லட்டும். அவர்களோ அல்லது அவர்களுக்கு அன்பானவர்களோ சுகம் வேபெற வேண்டி ஜெபிக்கலாம், அல்லது தாங்கள் அன்பில் வளரவும், விசேஷித்த விதத்தில் தேவனால் பயன்படுத்தப்படவும் ஜெபிக்கலாம். பின்னர், மாதிரிப் பாடத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நாமங்களையும், அவருடைய குணாதிசயங்களையும் அவர்கள் சொல்லும்படிச் செய்யுங்கள்.

## பேசு!

- “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று வேதாகமம் கூறுகிறது. நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது, நமக்கு அந்த அதிகாரம் கிடைக்கிறது.
- இதனால் எழும் கேள்விகள்: நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தால் நாம் நினைக்கிற விதத்தில் தேவன் நம் ஜெபங்களுக்கெல்லாம் பதில் கொடுப்பாரா? நான் விரும்பும் அனைத்தையும் தேவன் எனக்குக் கொடுப்பார் என்று அர்த்தமாகிறதா?
- நம்முடைய ஜெபங்கள் பரலோகப் பிதாவை மகிமைப்படுத்தும் காரியங்களிலும், பூமியில் அவருடைய ராஜ்யத்தை வளரச் செய்கிற காரியங்களிலும் கவனம் செலுத்துவதாக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் தங்கள் ஜெப வாழ்க்கையைப் பற்றித் திறந்த மனதுடன் பகிர்ந்து கொள்ளட்டும். அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைத்திருக்கிறதா? சில ஜெபங்களுக்குத் தாங்கள் விரும்பியபடி பதில் கிடைக்கவில்லை அல்லது எந்தப் பதிலும் கிடைக்கவே இல்லை என்பதற்காக அவர்கள் குழப்பமடைந்திருக்கிறார்களா?

# அதிகாரம்

## உங்களால் கேட்க முடிகிறதா?

**பர்திமேயு குருடன் (மாற்கு 10:46-52)**

குருடனான பர்திமேயு என்னும் பிச்சைக்காரன் எரிகோ என்ற ஊரின் தெருக்களில் வாழ்ந்து வந்தான். அவன் இயேசுவையும் அவர் செய்த அற்புதங்களையும் பற்றிக் கேட்டிருந்தான். இயேசு எப்படி வியாதியுள்ளவர்களையும், குருடர்களையும், நடக்க முடியாதவர்களையும் சுகமாக்கினார் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். இயேசு தன்னையும் சுகமாக்க வேண்டும் என்று விரும்பிய பர்திமேயு, "இயேசுவே, எஜமானரே, எனக்கு இரங்கும்! எனக்கு இரங்கும்!" என்று கத்தினான். அங்கிருந்தவர்கள் பர்திமேயுவிடம் அன்பாக இருக்கவில்லை. அவர்கள், "பேசாமல் அமைதியாக இரு!" என்று அவனை அதட்டினார்கள். ஆனால் பர்திமேயு அதையெல்லாம் கண்டுகொள்ளவே இல்லை, தொடர்ந்து இயேசுவைக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தான். அவன் சத்தத்தைக் கேட்ட இயேசு, "அவனை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றார். அங்கிருந்தவர்கள் அவனிடம், "கவலைப்படாதே, அவர் உன்னைக் கூப்பிடுகிறார்!" என்று சொன்னார்கள். உடனே பர்திமேயு தன் மேல்சட்டையைக் கழற்றி வீசிவிட்டு, குதித்து எழுந்து இயேசுவிடம் ஓடினான். இயேசு அவனிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். பர்திமேயு, "நான் பார்வையடைய வேண்டும்!" என்றான். இயேசு, "உன் விசுவாசம் உன்னைச் சுகமாக்கியது" என்றார். இயேசுவுக்கு நம்மைச் சுகமாக்கும் வல்லமை உண்டு என்பதை பர்திமேயு விசுவாசித்தான். பர்திமேயு தனக்குப் பார்வை கிடைத்ததும் எப்படி சந்தோஷப்பட்டிருப்பான் என்று யோசித்துப் பாருங்கள். அவன் தன் கண்களைத் திறந்து இயேசுவைப் பார்த்தபோது எப்படி இருந்திருக்கும்? அதன் பின் அவன் மாறிவிட்டான். இயேசு செய்த அற்புதத்தை எல்லோரிடமும் பகிர்ந்து கொண்டு, அவரைப் பின்பற்றத் தொடங்கினான்.



## உன்னால் செய்ய முடியுமா?

- இயேசுவுக்குப் பிரியமானவைகளில் உன் கவனத்தைத் திருப்பு.
- இயேசுவின் நாமத்தில் ஞானத்தையும், வழிநடத்துதலையும் கேட்டு ஜெபி.
- சுகத்திற்காகவும் பலத்திற்காகவும் இயேசுவின் நாமத்தில் ஜெபி.
- இயேசுவின் நாமத்தில் வல்லமை உண்டு என்று உன் இருதயத்தில் விசுவாசி.

# அதிகாரம்

## விளையாடு!

“ஓகே பயிற்சியாளரே!”

1. நீங்கள்தான் இந்த விளையாட்டின் பயிற்சியாளர் என்றும், விளையாடுபவர்களுக்குச் சவால் கொடுக்கப் போவதாகவும் சொல்லுங்கள்.
2. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் பக்கவாட்டில் வரிசையாக நிற்க வேண்டும் – எதிரெதிரான இரண்டு வரிசைகளில், ஒரு வரிசையில் இருப்பவர்கள் மற்ற வரிசையில் இருப்பவர்களைப் பார்க்கும் விதத்திலும், ஒரு வரிசையில் இருப்பவர்கள் நீட்டும் கைகளை இன்னொரு வரிசையில் இருப்பவர் தொடும் தூரத்திலும் நிற்க வேண்டும். அப்படி நீட்டப்பட்டக் கைகளுக்கிடையே ஒரு பிள்ளை வரிசையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஓட வேண்டும்.
3. சுலபமாக இருப்பதாகத் தோன்றுகிறதா? ஆனால் ஓடுகிற பிள்ளை கண்ணைக் கட்டிக் கொண்டு ஓட வேண்டும் (ஒரு துணி, அல்லது சேர்த்துக் கட்டிய மூன்று சாக்ஸ் பயன்படுத்திக் கண்ணைக் கட்டலாம். அல்லது ஓடும் பிள்ளை தன் கைகளால் கண்ணை மூடிக் கொள்ளலாம்).
4. பயிற்சியாளருக்கான முக்கியக் குறிப்பு: வரிசையின் கடைசியில் ஒரு பயிற்சியாளர் நின்று, பிள்ளைகள் வரிசையின் முடிவுக்கு ஓடி வரும்போது அவர்களை நிறுத்த வேண்டும். முக்கியமானது: எல்லாப் பிள்ளைகளையும் பயிற்சியாளர்தான் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. விளையாடுபவர்களுக்கான முக்கியக் குறிப்பு: வரிசைகளில் நிற்கும் பிள்ளைகள், ஓடும் பிள்ளை தடம் மாறினால், தங்கள் கைகளைக் கொண்டு சரியான பாதையில் மெதுவாக நடத்த வேண்டும்.
6. இரண்டு வரிசைகளுக்கு நடுவே ஓட ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

- நடைமுறை வாழ்க்கைக்கான சத்தியம்: விளையாடியவர்கள் பயிற்சியாளரை நம்பியதால், அவர் சொன்னதற்குக் கீழ்ப்படிந்தார்கள் – நாம் எல்லோருமே நம் “பயிற்சியாளர்கள்” சொல்வதைக் கேட்கிறோம். அதைவிட அதிகமாக இயேசுவின் விசுவாசிகள் இயேசுவை நம்பி, அவர் சொல்வதைக் கேட்டு, கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால், அவருக்கு எல்லா அதிகாரமும் உண்டு!

## கேள்விகள்

1. இந்த விளையாட்டில், நீ கண்ணைக் கட்டிக் கொண்டு ஓடியபோது, பயிற்சியாளர் சொன்னதை நம்புவது கடினமானதாக இருந்ததா? நீ ஏன் பயிற்சியாளர் சொன்னதைக் கேட்டு நடந்து கொண்டாய்? எல்லா விளையாட்டு வீரர்களும் ஏன் பயிற்சியாளர்கள் சொல்வதைக் கேட்கிறார்கள்? (பயிற்சியாளருக்கு அதிக அனுபவம் உண்டு, பயிற்சியாளர் நான் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறார், பயிற்சியாளருக்கு விளையாடிய அனுபவம் உண்டு, அவருக்கு நம்மை விடச் சிறப்பான கண்ணோட்டம் உண்டு)
2. தேவன் எல்லாவற்றையும் படைத்து, ஆளுகிறவராக இருப்பதாலும், தேவனுடைய குமாரனாகிய இயேசு ராஜாதி ராஜாவாக இருப்பதாலும், இயேசுவின் நாமத்தில், தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போது, எந்த அளவுக்கு வல்லமை இருக்கும் என்று நினைக்கிறாய்? (எல்லா வல்லமையும் இருக்கும்)
3. தேவனே, இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பியதற்காக நன்றி. உம் பிள்ளையாகிய என்னை இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க அனுமதிப்பதற்காக உமக்கு நன்றி. தேவனே, என்னை வழிநடத்தும்படி நான் பரிசுத்த ஆவியானவரை நம்பிச் சார்ந்து கொள்கிறேன். தேவனே, உமக்கு மகிமையாக என் வாழ்க்கையை நீர் எப்படிப் பயன்படுத்தப் போகிறீர்? (சற்று நிறுத்தவும்) இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

©2018 The Prayer Covenant for Children/Games provided by GameLife77.com. All rights reserved.



# அதிகாரம்

## பயிற்சித்தாள

1. பாராட்டுக்கள்! அதிகாரம் பற்றிய ஜெபத்தின் கடைசி வரிக்கு வந்துவிட்டாய்! அதைக் கீழே எழுத முடியுமா?

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   பிலிப்பியர் 2:9, 11b "ஆதலால் தேவன் ______________ ______________ அவரை ____________________ எல்லா ______________ ______________ அவருக்குத் தந்தருளினார்."

3. இன்றைய வேதாகமக் கதையைப் பற்றி யோசித்துப் பார்க்கையில், இயேசு பர்திமேயுவைச் சுகமாக்கியதன் காரணம் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறாய்? பர்திமேயு கூப்பிட்டதைக் கேட்ட இயேசு நீ கூப்பிடுவதையும் கேட்பாரா? நீ கூப்பிடுவதை இயேசு கேட்பார் என்றால், பர்திமேயுவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்தது போல உன் ஜெபத்திற்கும் பதில் கொடுப்பாரா? இதற்கான பதில், "ஆம்!" என்பதே. நீ தேவனிடம் உனக்கும், பிறருக்கும் சுகத்தையும், பலத்தையும், உதவியையும் கேட்கலாம். ஏனென்றால், தேவன் ஜெபத்தைக் கேட்டு, பதில் கொடுக்கிறவர்!

4. பதில் நேரம்:

   ஒரு ஜெப விண்ணப்பப் பெட்டியைச் செய்யவும். ஷூ பெட்டி, அல்லது ஏதேனும் ஒரு அட்டைப் பெட்டியைப் பயன்படுத்தலாம். அந்தப் பெட்டியை வண்ணத்தாள்கள், அல்லது படங்கள் வைத்து அலங்காரிக்கவும் அல்லது "என் ஜெபப் பெட்டி" என்று அதன் மேல் எழுதினாலும் போதும். உன் ஜெப விண்ணப்பங்களை எழுதி, அந்தப் பெட்டியில் போட்டு, ஒவ்வொரு நாளும் மறவாமல் ஜெபி. தேவன் உன் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும்போது, அதையும் எழுதி வை. உன் ஜெபங்களைக் கேட்டு பதில் தருவதற்காக எப்போதும் தேவனுக்கு நன்றி சொல்லு!

# அதிகாரம்

## ராப் பாடல்!




இயேசுவின் நாமம் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்!

ஆமென்! ஆமென்!

இயேசுவின் நாமத்தில் சத்தியமும், வல்லமையும் உண்டு!

ஆமென்! ஆமென்!

இயேசுவின் நாமத்தில் சுகமும், பலமும் உண்டு!

ஆமென்! ஆமென்!

இயேசுவின் நாமத்தில் நம்பிக்கையும், சந்தோஷமும் உண்டு!

ஆமென்! ஆமென்!

இயேசுவின் நாமத்தில் கிருபையும், சமாதானமும் உண்டு!

ஆமென்! ஆமென்!

இயேசுவின் நாமத்தில் பூரணமான அன்பு உண்டு!

ஆமென்! ஆமென்!

கருப்பு நிற வார்த்தைகளை ஆசிரியர் முதலில் சொல்ல, அதைத் தொடர்ந்து பிள்ளைகள் நீல நிறத்தில் இருக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். பின்னர், வகுப்பில் இருப்பவர்கள் ஒரு குழுவாகத் தாங்களாகவே பாடல் வரிகளை வெள்ளைப் பலகையில் எழுதச் சொல்லலாம். பிள்ளைகள் அவர்கள் எழுதிய ராப் பாடலை அவர்களே பாடும்போது எப்படி பரவசமடைகிறார்கள் என்று பாருங்கள்!

# என் ஜெப உடன்படிக்கைப் பதிவு

| பெயர் | நாள் |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.




©2018 The Prayer Covenant for Children. All rights reserved.




©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.




©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.






©2018 The Prayer Covenant for Children. All rights reserved.

# சிருஷ்டிப்பு முதல் கிறிஸ்து வரை – கையசைவுகள்

கையசைவுகளைக் கொண்டு பிள்ளைகள் எளிமையாக சுவிசேஷச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கான வழி பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. கீழேயுள்ள படங்களைப் பார்த்து, உன் குடும்பத்தினர் மற்றும் உறவினரிடம் பகிர்ந்து கொள்வதற்கு அது எவ்வளவு எளிமையாகவும், விளையாட்டாகவும் இருக்கிறது என்று கவனிக்கவும்! இது, “உம் மகிமைக்காகவும மற்றும் பிறர் உம்மைப் பின்பற்றும்படி அவர்களை அழைக்கவும் என்னைப் பயன்படுத்தும்” என்னும் சீஷராக்கும் ஜெபத்துடன் நன்றாக ஒத்துப் போகிறதாக இருக்கும்.



1. தொடக்கத்தில், தேவன் ஒரு பரிபூரணமான உலகத்தைப் படைத்தார்.



2. பாவம் தேவனுடைய பரிபூரண உலகத்தைத் தகர்த்துவிட்டது.



3. பாவத்தின் சம்பளம் மரணம்.



4. தேவ குமாரனாகிய இயேசு பாவத்திற்கான தண்டனையை ஏற்றுக் கொண்டார்.



5. இயேசு மட்டுமே பூரணமான ஒரே மனிதராக இருந்தார்.



6. இயேசு மரித்தார்.



7. இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.



8. இயேசு மரணத்திலிருந்து உயிருடன் எழுந்தார்.



9. இயேசு உன் பாவங்களுக்காக மரித்ததால்,



10. இப்போது இயேசு உனக்கு நித்திய வாழ்வு என்னும் பரிசை வழங்குகிறார்.



11. இந்தப் பரிசு உனக்குப் பிடித்திருக்கிறதா?



12. விசுவாசத்துடன் இயேசுவை உன் இரட்சகராக இருக்கும்படி கேட்டுக் கொள்.



13. புறப்பட்டுப் போய், எல்லோரிடமும் இந்த நற்செய்தியைச் சொல்!

©2018 The Prayer Covenant for Children/Creation to Christ Hand Motions provided by GameLife77.com and line drawings provided by One Hope. All rights reserved

## சிறுபிள்ளைகளுக்கான ஜெப உடன்படிக்கை உதவி உபகரணங்கள்

எங்களுடைய புத்தகங்கள், கையேடுகள், ஜெப அட்டைகள், வண்ணந்தீட்டும் புத்தகங்கள் போன்றவற்றையும், மற்ற இலவச ஒளி-ஒலி பயிற்சியையும், பதிவிறக்கம் செய்து கொள்ளக் கூடிய மற்ற உபகரணங்களையும் காண, இணையதளத்திற்குச் செல்லவும்.










theprayercovenant.org/children

தரிசனம்: இயேசு கிறிஸ்துவின் உன்னத நிலையை அவர் உண்டாக்கிய உலகம் அறியச் செய்தல்.
பணி: ஜெப உடன்படிக்கை மூலம் சிறு பிள்ளைகளையும், பெரியவர்களையும் இயேசுவைப் பின்பற்றும்படி வழிநடத்துதல்.

இந்த இயக்கத்தில் இன்றே இணையுங்கள்: மேலும் தகவலுக்கு, theprayercovenant.org/children என்ற வலைதளத்திற்குச் செல்லவும்




என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். –எரேமியா 33:3